Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து.
ரா ம் கோ
(சி-729)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 21 (24.04.2003) வியாழக்கிழமை இதழ் :203

# அரசின் நடவடிக்கை அவதானிக்கப்படுகிறது;

# அதுவரையில் சிறான் கூட்டமும் ஒத்திவைப்பு!

## விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவிப்பு

(கொழும்பு)

**நாளை நடைபெறவிருந்த உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வு தேவைகளுக்கான உபகுழுவின் (சிறான்) கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், சிறானின் அரசதரப்புக் குழுவின் தலைவர் பேனாட் குணதிலகவுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது -

சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதிலிருந்து நாம் இடைவிலகிக் கொள்வது என்று எமது தலைமைப்பீடம் முடிவெடுத்துள்ள நிலையில், நாளை நடைபெறவிருந்த சிறான் கூட்டத்தையும் ஒத்திவைப்பது என முடிவெடுத்துள்ளோம்.

அடுத்த சிறான் கூட்டத்துக்கான திகதியை நிர்ணயிப்பதற்கு முன்பாக, கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணிலுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்ட - அவசர தேவைகள் அமுலாக்கப்படுகின்றதா, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதா என்பதை அவதானிக்க எமது தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது. இடம்பெயர்ந்த அகதி மக்களுக்கான மீள் குடியேற்றம், புனர்வாழ்வு என்பவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

வடக்கு - கிழக்கில் வாழும் மக்களின் வாழ்வினை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கான மனிதா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்த அரசின் உயர்மட்டத்தில் முயற்சி!

விடுதலைப் புலிகள் பேச்சுக்களை இடைநிறுத்துவதாக அறிவித்திருப்பது தொடர்பாக, பேச்சுக்களில் பங்கேற்கும் அரசதரப்பு முக்கியஸ்தர்களான அமைச்சர்கள் ஜி.எல். பீரிஸ் மற்றும் மிலிந்த மொறகொடவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீண்ட ஆலோசனை ஒன்றை நடத்தியிருக்கிறார்.

இந்தச் சந்திப்பு பற்றிய மேலதிக விபரங்கள் தெரியவராதபோதும்.

அரச தரப்பு முக்கியஸ்தர் ஒருவரை வன்னிக்கு அனுப்பி, விடுதலைப் புலிகளுடன் இணக்கமான போக்கைத் தொடர ஆலோசிக்கப்படுவதாகவும் அநேகமாக , அரசாங்கத்தின் சமாதான செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக வன்னிக்கு விரைவில் அனுப்பப்படலாம் எனவும் தெரியவருகிறது.

## பேச்சிலிருந்து விலகினாலும் போர்நிறுத்தம் பேணப்படும்

### புலிகள் உறுதியளித்ததாக கண்காணிப்புக்குழுப் பேச்சாளர்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களிலிருந்து புலிகள் தற்காலிகமாக விலகிக் கொள்வதாக எடுத்துள்ள முடிவு, போர்நிறுத்த உடன்பாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொகில்சன் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கடிதம் அனுப்பிய பின்னர், தம்முடன் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தொடர்பு கொண்டு இந்த உறுதிமொழியை வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்பாட்டிலோ, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்பான தமது அணுகுமுறையிலோ எந்த மாற்றமும் இல்லை எனப் புலித்தேவன் தெரிவித்ததாகவும் ரொகில்சன் கூறினார்.

அத்துடன் - ஓமந்தையில் நடைபெறவிருந்த கூட்டம் பிற்போடப்பட்டதற்கும், புலிகள் பேச்சுக்களிலிருந்து விலகியதற்கும் தொடர்பில்லை.

அரசிடமும், புலிகளிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிபார்சுகளை ஆராய அவகாசம் தேவையென்பதாலேயே இக் கூட்டம் பிற்போடப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் தலையீட்டை இந்தியா முறியடிக்கவேண்டும்

### ஜே.வி.பி. விமல் வீரவன்ச கோரிக்கை

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா உடன் தலையிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டை முறியடிக்க வேண்டும் என்று ஜே.வி.பியின் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்கா - தனது முகவர்களைப் பாவித்து நாட்டைப் பரிக்கச் சதி செய்கிறது. இதனைத் தடுக்க, ஜனாதிபதி சந்திரிகா தன்னிடமுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தவேண்டும். நாட்டுக்கு இப்போது ஆபத்து ஏற்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடற்புலிகளை அங்கீகரிக்கக் கோரும் சில விடயங்கள் குறித்து இந்தியா கவனம் செலுத்தவேண்டும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மதுபானசாலை உரிமையாளர் சாவகச்சேரியில் வெட்டிக்கொலை

### நேற்றிரவு இனந்தெரியாத குழுவினர் வெறியாட்டம்

(நமது நிருபர்)

சாவகச்சேரியில் - நேற்று இரவு மதுபானசாலை உரிமையாளர் ஒருவர், இனந்தெரியாத கும்பலொன்றினால் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டார்.

சாவகச்சேரி, டச்சு றோட்டைச் சேர்ந்த எம்.அற்புதராஜா (வயது 52) என்பவர் நேற்றிரவு 8.25 மணியளவில் தனது மதுபானசாலையை மூடிவிட்டு உதவியாளர் ஒருவருடன், ஹைஏஸ் வானில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது - டொல்பின் வான் ஒன்றில் வந்த எட்டுப் பேரடங்கிய கோஷ்டியொன்று - வானை வழிமறித்து சம்பந்தப்பட்ட நபரை வெளியே இழுத்து தாறுமாறாக வெட்டியது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுக் காயத்துடன் சடலம் துன்னாலைப் பகுதியில் மீட்பு

வாய்க்குள் சீலை அடையப்பட்ட நிலையில் கழுத்துப் பகுதியில் வெட்டுக் காயத்துடன் சடலம் ஒன்று துன்னாலையில் நேற்று மீட்கப்பட்டது. ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் இருந்து மீட்கப்பட்ட இச் சடலத்தின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்தன.

செல்லையா புவனேந்திரராஜா (53 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவர் இதுவரை வவுனியாவிலேயே வசித்துவந்தவர். இவரது குடும்பத்தினரும் வவுனியாவிலேயே உள்ளனர்.

நேற்றுமுன்தினம் தாயாரின் வட்டில் இருந்து புறப்பட்ட இவர், பின்னர் வீடு திரும்பவில்லை எனவும், பின்னர் கிராமத்தவர்களால் இவரது சடலம் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சடலத்தை பொலிஸார் பொறுப்பேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். (சு,9,15)



வலி. வடக்குப் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் வெளியேறி, இன்றும் தம் வீடுகளுக்குத் திரும்பமுடியாது மல்லாகம் அகதிமுகாமொன்றில் வாடும் மக்கள் இவர்கள். (படங்கள்:லிவிங்ஸ்டன்)

## தீயில் எரிந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

குடிபோதையில் தவறுதலாக மண்ணெண்ணெயைக் குடித்துவிட்டு தீப்பெட்டியைத் தட்டியபோது, தீப் பற்றியதால், நபர் ஒருவர் எரிந்து மரணமான சம்பவமொன்று நேற்று இணுவிலில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் - இணுவிலைச் சேர்ந்த சின்னத்துரை விஜயரெட்ணம் (வயது 58) எனும் நபரே இறந்தவராவார்.

மேற்படி நபர், சம்பவம் இடம் பெற்ற இரவன்று குடிபோதையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



இனி அடக்குவார் அடக்கினால் தான் ஊரில ஆட்டங்கள் அடங்கும்!

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-730)

# வடக்கு கிழக்கு மாகாண
# சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்
# (நீகோட்)
# ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## கடன் இலக்கம் - 1846 - ஸ்ரீ (எஸ்.எவ்)

### கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக மீளமைப்பு உபதிட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜி.ஓ) விருப்ப வெளிப்பாடுபற்றிய அழைப்பு

வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் இன முரண்பாட்டினால் மக்களின் குறிப்பாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளான நிவாரணம், புனரமைப்பு வேலைகளுக்கு மேலும் வலுவூட்டி பங்களிப்புச் செய்வதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்க திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தி உபதிட்டங்கள் சமூகத்தை மையமாக கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் இத்திட்டத்தின் அடிப்படை அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதிலும் முற்றாக பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல்நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பல கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஆரம்பகட்டமாக பின்வரும் கிராமம் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்கு தயார்ப்படுத்துவதற்கும், வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு கிழக்கில் திட்டங்களை செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

மாவட்டம் - கிளிநொச்சி  கிராமம் - பாரதிபுரம்

ஆர்வமுடைய அரச சார்பற்ற நிறுவனம் இது பற்றிய மேலதிக விபரங்களை வேலைநாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரிடமிருந்து (கிளிநொச்சி மாவட்டம், தொலைபேசி 0212223945 தொலைநகல் 0212223945 மின்னஞ்சல் மூலம்) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல்நடத்த விரும்பும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை மாவட்ட செயலாளருக்கு/அரசாங்க அதிபருக்கு 02.05.2003 மாலை 3.00 மணிக்கு முன்பதாக தெரிவிக்க வேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விபரங்களை அது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள் நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவுசெய்த விபரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக் காரியாலயம் முதலியன.
02. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையையும் நிபுணத்துவம் பெற்ற துறையையும்.
03. வடகிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு, சமூக மீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வட்கிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறு குழுக்களை உருவாக்குதல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்கல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடகிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வேலை தொகையையும், கடந்த 05 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விபரங்களையும்.
06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. விருப்ப தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும், விண்ணப்பமும் அந்தரங்கமாக பேணிக் காக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தி.இராசநாயகம்
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
மாவட்டம் - கிளிநொச்சி.

(சி-869)

# அரசு - புலிகள் பேச்சுக்கள் விரைவில் மீள ஆரம்பமாகும்

## அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் - இலங்கை அரசாங்கத்துடன் விரைவில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக, அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளரான றிச்சர்ட் பௌச்சர் தெரிவித்தார்.

வொஷிங்ரனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே றிச்சர்ட் பௌச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதை இடைநிறுத்தியிருப்பது தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர், இது சமாதான முயற்சிகளில் குழறுபடிகளை ஏற்படுத்தாது என அமெரிக்கா கருதுவதாகவும் -

இந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட்டுவிடும் என நம்புவதாகவும் குறிப்பிட்டார். மேலும் இந்த விவகாரம் தொடர்பாகத் தாம் மேலதிக தகவல்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த 14 ஆம் திகதி வொஷிங்ரனில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளில் முன்னோடிக் கூட்டத்துக்குப் புலிகள் அழைக்கப்படாமைக்கு, சட்டரீதியான சிக்கல்களே காரணம் என்றும் றிச்சர்ட் பௌச்சர் மேலும் குறிப்பிட்டார். (01)

# வெலிக்கடை சிறைக்குச் சென்று ரத்வத்தவை பார்த்த சந்திரிகா

கண்டி - உடதலவின்னவில் 2001 ஆம் ஆண்டு தேர்தலின்போது, பத்து முஸ்லிம் இளைஞர்களைச் சுட்டுக்கொன்ற வழக்கில் சந்தேக நபராகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்துப் பேசினார்.

வெலிக்கடைச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜெனரல் ரத்தவத்தவை - நேற்றுமுன்தினம் அங்கு சென்ற ஜனாதிபதி சந்திரிகா நேரில் பார்த்துப் பேசினார்.

இதேவேளை, தன்னைப் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டுமென ஜெனரல் ரத்வத்த மீண்டும் நீதிமன்றத்தில் செய்திருந்த விண்ணப்பம் நேற்று நிராகரிக்கப்பட்டது.

மேல் நிதிமன்றத்தில் பிணை மனு நிராகரிக்கப்பட்டதால் வேறெந்த நீதிமன்றத்திலும் பிணை மனுத் தாக்கல் செய்யமுடியாதென உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## வணிகர் கழகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வரிகள் மற்றும் வர்த்தகர்களுக்கான பிரச்சினைகள் பற்றி விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பிரமுகர்கள் பாலகுமாரன், தங்கன் ஆகியோருடனான கலந்துரையாடலொன்று - இன்று பி.ப. 3 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல வர்த்தகர்களும் தவறாது கலந்துகொள்ளும்படி யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது.

## ‘வேர்கள் துளிர்க்கும்’ சிறுகதைத்தொகுதி வெளியீடு

(வவுனியா)

கப்டன் வானதி பதிப்பகத்தின் மூன்றாவது வெளியீடான “வேர்கள் துளிர்க்கும்” சிறுகதைத்தொகுதி நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

இந்தச் சிறுகதைத் தொகுதியில் பதினைந்து பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை தலைமையில் நடைபெற்ற வெளியீட்டுவிழாவில், நூலுக்கான அறிமுகவுரையினை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனும், மதிப்புரைகளை திருமதி மாணிக்கவாசகம், கனகரவி ஆகியோரும் நிகழ்த்தினர்.(03)



காஞ்சிரங்குடாவில் அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த 8 பொதுமக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நாட்டுப்பற்றாளர் நினைவுத்தூபியை புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:சலீம்)

# உபகுழுக் கூட்டங்கள் தடையின்றி நடைபெறும்

## பேனாட் குணதிலக தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்திய போதும், நியமிக்கப்பட்ட உபகுழுக்களின் கூட்டம் மற்றும் நடவடிக்கைகள் தடையின்றித் தொடர்ந்து இடம்பெறுமென்று சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேனாட் குணதிலக தெரிவித்துள்ளார்.

நாளை கிளிநொச்சியில் திட்டமிட்டபடி வடக்கு - கிழக்கில் அவசர உதவிகள் குறித்து உபகுழு கூடி ஆராயுமென்று தெரிவித்த பணிப்பாளர் - அரசாங்கமும் - விடுதலைப்புலிகளும் முன்வைத்திருக்கின்ற திட்டங்களில் மேற்கொள்ளவேண்டிய நிகழ்ச்சிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதுவரை வடக்கு - கிழக்கில் இருசாராரும் 300 இற்கு மேற்பட்ட திட்டங்களை முன்வைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தக் குழுவின் கூட்டத்தில் நோர்வே, ஜப்பானிய அதிகாரிகள் பங்குகொள்வர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்புலிகளை அங்கீகரிப்பதை உடன் தடுத்து நிறுத்த வேண்டும்

## தேசிய பிக்குகள் முன்னணி சந்திரிகாவுக்கு அவசர கடிதம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படைக்கு அரசாங்கம் அங்கீகாரம் கொடுப்பதை உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு - தேசிய பிக்குகள் முன்னணி அவசர கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளரான வண.கலவெல்கல சந்திரலோக தேரோ இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

நோர்வே அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்குச் சார்பான வகையில் நடந்துகொண்டிருக்கிறது. போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, விடுதலைப்புலிகளின் கடற்புலிகளை ஒரு தனியான கடற்படையாக அங்கீகரிக்க வேண்டுமெனச் சிபார்சு செய்துள்ளது.

இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டால் நாட்டின் தேசிய ஒருமைப்பாடு, தேசிய சுதந்திரம், தேசிய பாதுகாப்பு என்பன கடுமையாகப் பாதிக்கப்படும். இந்த நிலைக்கு இடமளிக்கப்படக்கூடாது. விடுதலைப்புலிகளின் கடற்படைக்குச் சர்வதேச அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் எந்தச் செயலிலும் அரசாங்கம் இறங்குவதைத் தடுக்க வேண்டும், அல்லாவிடில் கடற்படையினர் ஒடுக்கப்பட்டுவிடும்நிலை தோன்றும்.

எனவே, இந்த விடயத்தில் நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர் என்றவகையில் ஜனாதிபதி தலையிட்டு அரசாங்கத்தின் முயற்சிகளைத் தடுக்கவேண்டும் என்றும் தேசிய பிக்குகள் முன்னணியின் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

# வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் இரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள்

## நிறுவத் திட்டமிடுகிறது அரசாங்கம்

வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் இலங்கையில் இரண்டு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவுவதற்கு, அரசாங்கம் ஆலோசித்து வருவதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தகம் விமலசேன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் ஒன்றும், சப்புகஸ்கந்தவில் ஒன்றுமாக இரண்டு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளன. அத்துடன், இவற்றுடன் இணைந்ததாக 900 மெகாவாட்ஸ் சக்தி கொண்ட இரண்டு மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவுவதற்குச் சீனாவிலுள்ள பிரபல அரச நிறுவனம் ஒன்று முன்வந்திருப்பதாகவும், இது தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகவும் மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பான இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# முஸ்லிம் தலைவர்களுடன் சந்திரிகா கலந்துரையாடல்!

## இவ்வாரம் நடைபெறும்

(கொழும்பு)

மூதூரில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி - சகல முஸ்லிம் கட்சிகளுடனும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் முக்கிய சந்திப்பொன்றை நடாத்தப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

மேல்மாகாண ஆளுநரும், சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான அலவி மௌலானா நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தபோதே, இந்த முக்கிய கலந்துரையாடலுக்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு அவரிடம் பணிப்பு விடுக்கப்பட்டது. இந்தவாரத்தினுள் கொழும்பில் இக் கலந்துரையாடல் நடைபெறும் எனக் அறியமுடிகிறது.

இதேவேளை - மிகவிரைவில் கிழக்கு மாகாணத்திற்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா தயாராகி வருவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (200)

## காரைதீவு, மல்வத்தை

# அதிரடிப்படை முகாம்கள் அகற்றுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள்

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி பிரதமரிடம் கோரிக்கை

காரைதீவு மற்றும் மல்வத்தை விசேட அதிரடிப்படை முகாம்களை அகற்ற வேண்டாமெனச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அனவர் இஸ்மாயில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கோரியுள்ளார்.

காரைதீவு மற்றும் மல்வத்தை விசேட அதிரடிப்படைமுகாம்கள் பொதுக் கட்டடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி படையினர் பொதுக் கட்டடங்களை விட்டு வெளியேற வேண்டும்.

பொதுக்கட்டடங்களில் உள்ள தமது முகாம்களை அதிரடிப்படையினர் அகற்ற நடவடிக்கை எடுத்து வருவதையடுத்தே, நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயில் இந்த அவசரக் கோரிக்கையைப் பிரதமரிடம் முன்வைத்துள்ளார்.

மூதூர்ப்பகுதியில் படைமுகாம்கள் இல்லாத காரணத்தினால் தான் அங்கு தமிழ் - முஸ்லிம் கலவரங்கள் ஏற்பட்டதென்றும் அவர் தெரிவித்துள்ளார். அன்வர் இஸ்மாயிலின் இந்தக் கோரிக்கையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (08)

# தந்தை செல்வா நினைவு நிகழ்வில் தமிழகப் பேராசிரியர் அறவாணன்!

தந்தை செல்வநாயகத்தின் 26 ஆவது நினைவுநாள் நிகழ்வில் - தமிழகத்திலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கா.பா. அறவாணன் கலந்துகொள்ளவுள்ளார்.

நாளை மறுநாள் பி.ப 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ள தந்தை செல்வாவின் 26 ஆவது நினைவுநாள் நிகழ்வில், “காந்தீய நெறிகளும், தந்தை செல்வாவின் அரசியல் இலட்சியமும்” என்ற தலைப்பிலான நினைவுப் பேருரையைப் பேராசிரியர் அறவாணன் நிகழ்த்துவார்.

அத்துடன், இந்த நிகழ்ச்சியில் இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்களின் ‘இசைமாலை’ நாட்டியாஞ்சலியும் இடம்பெறும். இந்த நிகழ்வுக்கு சிறப்புவிருந்தினராக மதுரை அன்னை திரேசா பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் தாயம்மாள் அறவாணன் கலந்துகொள்வார்.

# 'சுபானு' புத்தாண்டு உங்களுக்கு எப்படி



## மகரம்

உத்தரம் 2 ஆம் பாதம் முதல் திருகோணம், அவிட்டம் 2 ஆம் பாதம் வரை.

**உங்கள் விசேடத் தனித்திறன்கள்.**

கடின உழைப்பிற்குத் தயங்காத உள்ளம், உடனுக்குடன் செயலாற்றும் திறமை, குறையாது ஊற்றுப் பெருக்கும் உற்சாகம், மனோதைரியம், துணிவு.

**உங்கள் பலவீனம்**

பிடிவாத குணம், முன்கோபம், அவசர முடிவுகள், விதண்டாவாதம்

### 14.04.2003 முதல் 16.08.2003 வரை

புத்தாண்டின் முதல் நான்கு மாதங்களில் மேலும் பல நன்மைகளை உங்களுக்கு வழங்கும்படியாகக் கிரகநிலைகள் அமைந்துள்ளன. ஆறாம் இடத்தில் சனியும், களத்திர ஸ்தானத்தில் குருவும், 11 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிப்பது நல்ல யோக பலன்களை அளிக்கக்கூடியவையாகும். குடும்பத்தில் பரஸ்பர ஒற்றுமையும், அன்னியோன்யமும் நிலவும். சுப நிகழ்ச்சிகள் நிகழும், நிதிவசதி அபிவிருத்தி அடையும். ஜெனனகால கிரகநிலைகள், மற்றும் தற்கால தசாபுத்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் சிலருக்குப் புத்திரபாக்கியம் ஏற்படுவதற்கும் சாத்தியக்கூறு உள்ளது. பெண்கள், பிள்ளைகள் ஆகியோரின் கல்வி, விவாகம், சம்பந்தமான முயற்சிகள் நல்ல பலனைத்தரும். சிலருக்கு வசதியான வீடு அமையும். கடன்களை அடைப்பதற்கு உகந்தகாலம் இது. இத்தருணத்தைவிட்டால் மறுதருணம் வாய்ப்பது அரிது என கிரகநிலைகள் அறிவுறுத்துகின்றன. இதற்கு மற்றொரு காரணம். உங்கள் பாக்ய லாபஸ்தானங்கள் வலிமை பெற்றிருப்பதே. சிலருக்கு புதிய வாகன யோகமும் அமைவதற்குக் கிரகநிலைகள் சாதகமாக உள்ளன. ஒருசிலருக்கு வெளிநாடு சென்றுவரவும் வாய்ப்புண்டு.

**உத்தியோகம், தொழில், வியாபாரம்**

கிரகநிலைகளின் அடிப்படையில் இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும். மேலதிகாரிகளின் ஆதரவு பூரணமாக இருக்கும். மிகக்கஷ்டமான பொறுப்புக்களைக்கூட எளிதில் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய இடம்மாற்றம் அல்லது நிறுவன மாற்றம் ஏற்படக்கூடும். அதனால், எதிர்காலத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். சிறுபதவியுயர்வு, சம்பளம் உயர்தல் ஆகியவற்றையும் எதிர்பார்க்கலாம். தற்போது வேலையில்லாமல் சிரமப்படும் இந்த ராசியினருக்குச் சிறிது முயற்சியால் நல்ல வேலை கிடைக்கும். உங்கள் திறமையை வெளிப்படுத்தி முன்னேற்றம் காண்பதற்கு அனுகூலமான காலநிலை இது. வெளிநாட்டில் வேலை கிடைப்பதற்கு முயற்சி செய்துவரும் இந்த ராசியினருக்கு நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கும் என பாக்ய ஜீவன ஸ்தான கிரகநிலைகள் குறிப்பிடுகின்றன. தொழில் அதிபர்களுக்கு உற்பத்தி அதிகரித்தலும், புதிய வாய்ப்புகள் கிடைத்தலும், தொழிற்சாலை அபிவிருத்தி அடைதலும், சிலருக்கு வெளிநாடு சென்றுவரும் வாய்ப்புக்கிடைத்தலும், அதனால் தொழில் அபிவிருத்தி அடைதலும் தற்போதுள்ள கிரகநிலைகள் வழங்கும் நன்மைகளில் சிலவாகும். தொழிலில் பொருளாதாரநிலை ஸ்திரப்படும். உங்கள் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தக்கதருணம் இது. சிலருக்கு வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொழில் நுணுக்க ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். மகரராசியிற் பிறந்துள்ள வியாபாரிகளுக்கு உற்சாகமான காலகட்டம் இது. விற்பனை எதிர்பார்த்ததற்குமேல் அதிகரிக்கும். லாபம் உயரும்.

**அரசியலில் ஈடுபடுவோர்**

மகர ராசி அரசியலில் ஈடுபடுவோர் சிறந்த நற்பலன்களை எதிர்பார்க்கலாம். கட்சியில் செல்வாக்கு உயரும். தொண்டர்கள், மேலிடம், அரசாங்கம் ஆகிய அனைவரின் ஆதரவும் கிடைக்கும். வருமானத்திற்கும் குறைவிராது. செல்வாக்கை உபயோகித்து ஏதாவது ஒரு தொழிலை நடத்தவேண்டும் என்ற உங்களது நெடுநாளைய ஆசை இப்போது நிறைவேறும். கிரகநிலைகள் அளிக்கும் இந்த வாய்ப்பினை எந்தளவிற்குப் பயன்படுத்திக்கொள்கிறீர்களோ அந்த அளவிற்கு உங்களுக்கு ஆதாயம் கிடைக்கும் இந்தச் சுபானுப் புத்தாண்டில்.

**மாணவமணிகள்**

உங்கள் எதிர்கால முன்னேற்றத்திற்கு அத்திவாரம் அமைக்கும் காலகட்டம் இது. வித்யா ஸ்தானமும், வித்யாகாரரும், குருபகவானும் சிறந்த சுப பலன்களைப் பெற்றிருக்கின்றார்கள். அதனால், படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வெளிநாடுகளில் படித்துவரும் மாணவமணிகளுக்குச் சிறந்த நற்பலன்கள் ஏற்படும். ஒரு சிலருக்குப் படிப்பு முடிவதற்கு முன்பே விவாகம் நிச்சயமாகும். சப்தம ஸ்தானத்தில் குரு சுபப்பலம் பெற்று உச்சமாக இருப்பதால், சிலருக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கும். வெளிநாடு சென்று விசேட கல்வி பயில ஆர்வம் இருப்பின் அதற்கான முயற்சிகளை இப்போது மேற்கொள்ளலாம். தேவையான நிதியுதவிகளும், சிபாரிசுகளும் எளிதில் கிடைக்கும்.

**விவசாயத்துறையினர்.**

உங்கள் உழைப்பு வீண்போகவில்லை என்பது உங்கள் தோட்டத்தைப் பார்த்தாலே தெரியும். பயிர்கள் செழித்து வருமானம் உயரும். சிறு அளவில் அரசாங்க உதவிகளையும் எதிர்பார்க்கலாம். கால்நடைகள் அபிவிருத்தி அடையும். சிலருக்குப் புதிதாக ஆடு, மாடுகள் வாங்கும் யோகமும் உள்ளது. பழைய கடன்கள் இருப்பின் அது இப்போது அடைபடும். சிலருக்குப் பூர்வீகச் சொத்துக்கள் கிடைப்பதற்கும் கிரகநிலைகளின் அடிப்படையில் சாத்தியக்கூறுகள் உள்ளன. நவீன விவசாய வசதிகள் கிடைக்கவும் கிரகநிலைகள் சாதகமாக உள்ளன.

**பெண்மணிகள்**

மிகவும் அனுகூலமான காலகட்டத்தில் நீங்கள் இப்போது இருக்கின்றீர்கள். குடும்பச் சூழ்நிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். பெண்கள், பிள்ளைகள் ஆகியோர் படிப்பில் காட்டும் ஆர்வம் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் அளிக்கும். கணவரின் அன்பு, அன்னியோன்யம் மனநிறைவை அளிக்கும். ஆரோக்கியமும் நல்லபடியே உள்ளது.

**ஆரோக்கியம்**

மேலே கூறியுள்ளபடி முக்கியமான கிரகங்கள் நல்லபடி சஞ்சரிப்பதால், உடல் உபாதைகள் நீங்கும். ஆரோக்கியம் அபிவிருத்தி அடையும். நிரந்தரமாக உடல் நலக்குறைவு உள்ளவர்களுக்குக்கூட இப்போது நல்ல குணங்கள் தெரியும். வயதான மகரராசியினருக்கு உடல் நிலைமையில் சிறந்த அபிவிருத்தி ஏற்படும். உடல் அசதி, கை, கால்களில் மூட்டுவலி ஆகியவை குறைவதை அன்றாட அனுபவத்தில் காணலாம்.

**பொருளாதாரம்**

பழைய கடன்களை அடைப்பதற்கும், எதிர்காலத்திற்கென்று சிறிதளவாவது சேமிப்பதற்கும் உகந்த நேரமிது. வருமானத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். வீண் செலவுகள் குறைவதும் ஒரு நன்மை. சுருக்கமாகக் கூறவேண்டுமானால் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் 14.04.2003 முதல் 16.08.2003 வரை மிகவும் அனுகூலமான காலகட்டமாகும். அதற்கு முன்பு கஷ்டப்பட்டவர்களுக்குக்கூட இந்த 4 மாதங்களில் வருமானம் அதிகரித்துச் சிரமங்களும் குறையும்.

**தமிழ்நாட்டின் பிரபல சோதிட சக்கரவர்த்தி ஏ.எம்.இராஜகோபாலன்**

### 17.08.2003 முதல் 12.04.2004 வரை

அஷ்டம ஸ்தானத்திற்குக் குரு மாறுகிறார். இந்த மாறுதல் சனி பகவானால் ஏற்படும் நன்மைகளை ஓரளவு குறைக்கும். இருப்பினும் உங்கள் ராசியின் வாக்கு, தனம், குடும்பம் மற்றும் சுகம், விரயம் ஆகிய ஸ்தானங்களுக்கு குருபகவானின் சுபப்பார்வை ஏற்படுகிறது.

குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். ஏதாவதொரு காரணத்தினால் வருமானமும் சிறிது பாதிக்கப்படக்கூடும். உடல் உபாதைகளினால் உடலில் அசதியும், பலவீனமும் ஏற்படும். பிள்ளைகளினால் எதிர்பாராத சிரமங்கள் உண்டாகும். திருமண முயற்சிகளில் தடங்கல்கள் ஏற்படும்.

சில சமயங்களில் நிதானத்தை இழந்து அவசர முடிவுகள் எடுக்க வாய்ப்புக்கள் உண்டு. எனவே, அவற்றைக் கூடியவிரைவில் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். சுபகாரியங்களில் பணம் விரயமாகும்.

தசாபுத்திகள் பாதகமாக இருப்பின் பணம், பொருள் ஆகியவை களவு போகக்கூடும். குடும்பத்தில் எதிர்பாராத பல பிரச்சினைகள் ஏற்படலாம். நெருங்கிய உறவினர்களிடையே ஒற்றுமையும் குறையும். மனைவியின் ஆரோக்கியம் குன்றும்.

நீதிமன்ற வழக்குகள் நிச்சயமாக முடிந்துவிடும் என்றிருந்த நிலைமைமாறி புதிய பிரச்சினைகள் ஏற்படும். குடும்பத்தில் புதிய சச்சரவுகள் உண்டாகும்.

உத்தியோகம், தொழில், வியாபாரம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் முன்னேற்றமும், அபிவிருத்தியும் தடைப்படக்கூடும். குடும்பத்தொல்லைகள் கவலையளிக்கும்.

( கும்பராசி நாளை)

---

# நீரிழிவை குணப்படுத்தும் மூலிகை; அமெரிக்க நிறுவனம் காப்புரிமை!

அமெரிக்க மருந்தாக்க நிறுவனம் ஒன்று இலங்கை, இந்திய நாடுகளில் காணப்படும் அரிய மூலிகைத் தாவரம் ஒன்றின் காப்புரிமையைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீரிழிவு நோயைக் குணப்படுத்துவதற்காக இலங்கை, இந்திய நாடுகளில் பயன்படுத்தப்படும் 'கம்மாலு' என்ற மூலிகைத் தாவரத்தின் காப்புரிமையையே அமெரிக்க நிறுவனம் பெற்றிருக்கின்றது.

கலிக்ஸ் தரா பியூட்டிக்ஸ் என்ற அமெரிக்க நிறுவனமே இந்த அரிய மூலிகைத் தாவரத்தின் காப்புரிமையைப் பெற்றிருக்கின்றது. இதனால் இந்த மூலிகைத் தாவரத்திலிருந்து, உள்ளூரில் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கோ அல்லது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவோ இந்த அமெரிக்க நிறுவனத்தின் அனுமதியைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை, இந்திய நாடுகளின் அரிய தாவரங்களை அமெரிக்க நிறுவனங்கள் தமது பெயரில் காப்புரிமை பெற்றுக்கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டடிப் பகுதியில் வீடமைப்பு பூர்த்தி விழா

யாழ்.கொட்டடிப் பகுதியில் அமைந்துள்ள முத்தமிழ் வீதி, மீனாட்சி அம்மன் வீதி ஆகியவற்றில் மீள்குடியேறும் மக்களுக்காக "எக்கோ" நிறுவன உதவித் திட்டத்தின் கீழ் 400 தற்காலிக வீடமைப்புத்திட்டம் பூர்த்தியாகவுள்ளது. இந்தப் பணியை நிறைவுசெய்யும் நிகழ்வு, இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மற்றும் எக்கோ, கியூடெக் நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பகுதிகளில் மீளக்குடியேறும் மக்களின் நன்றி தெரிவிப்பு நிகழ்வுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(சு)


## வாழ்த்துகிறோம்

வரதராஜன் கோமதி (டச்சு றோட், உடுவில்)
தம்பதிகளின் புதல்வர்கள்
பிரசாந்தன், பிரதீபன்

இருவரும் தமது முதலாவது பிறந்தநாளை 24.04.2003 இன்று தமது வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இவர்களை முருகன் அருள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

த.சண்முகவடிவேல் (தாய்மாமன்) குடும்பம்,
திருவாணி, இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி.
(சி-322)

## Indian Tiger



இன்று தனது 30 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் சச்சின் டெண்டுல்கருக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு அவர் பல சாதனை புரியவும் இந்நன்னாளில் வாழ்க என வாழ்த்துகிறோம்.

தொட்டிலடி, சங்கானை
சச்சின் ரசிகர்கள்
கண்ணா, கபில், விஷ்ணு, சிவசங்கர், கிருஸ்ணா, சண்ணுகா,,
துஷி, மது, அபி, பிரியா, றஜனி, கிரிஜா.
(சி-319)

## வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY



### முதலாவது அகவையில்



பெயர் : சீ.பவருசன்
முகவரி : நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

### எட்டாவது அகவையில்

பெயர் : ஞா.கிருசாந்தினி
முகவரி : துவாளி வீதி, இமையாணன், உடுப்பிட்டி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------------------
பெற்றார் ஒப்பம்


# கரவெட்டியில் நாய்களுக்கு தடுப்பு மருந்து

நெல்லியடி பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பிரிவிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

இன்று காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை கிழவி தோட்டம் சனசமூக நிலையத்திலும், 1 மணி தொடக்கம் 3 மணிவரை கரவெட்டி மத்தி தச்சை ஐங்கரா சனசமூக நிலையத்திலும், நாளை காலை 9 மணிதொடக்கம் 12 மணிவரை கட்டைவேலி நாமகள் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1 மணி தொடக்கம் 3 மணிவரை கரவெட்டி, சிந்தாமணி சனசமூக நிலையத்திலும் வைத்து தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.


ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன்,
ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
(குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்)
10.30, 2.30, 6.30, 9.30
(சி-732)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK 3
(சி-73)

# மூன்றாம் உலக நாடுகளின் கிராமிய வறுமையின் பண்புகளும் வறுமைத் தணிப்பு முயற்சிகளும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கிராமிய வறுமை மற்றும் அது எவ்வாறு அங்கு உருவாக்கப்படுகிறது என்பது தொடர்பாகப் பல்வேறு ஆராய்ச்சிகள் இடம்பெற்று வந்துள்ளன. அத்தகைய ஆராய்ச்சிகளில் பெறப்பட்ட சில முடிவுகளின் அடிப்படையில் பின்வரும் விடயங்கள் அல்லது காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

◆ இந்நாடுகளில் நிலவும் பால், இன, சமய, சாதி அடிப்படையில் நிலவும் வேறுபாடுகள்.

◆ விவசாய நிலங்களிலும், ஏனைய இயற்கை வளங்களின் மீதும் நியாயமற்ற வகையில் அமுலாக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிமுறைகள்.

◆ நிலவுடமை ஒரு பகுதியினரிடையே குவிந்திருத்தலும், குத்தகை முறைகளில் நிலவும் குறைபாடுகளும்.

◆ அபிவிருத்தி செயன்முறைகளிலிருந்து கிராமிய வறியவர்களை விலக்கக் கூடிய வகையிலான பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகப்படுத்துதல்.


◆ இந்நாடுகளில் வாழும் ஒவ்வொரு குடும்பங்களிலும் தங்கியிருத்தல் விகிதம் பெரியளவிலும், அது அதிகரித்து வரும் விதத்திலும் அமைந்திருத்தல்.

◆ காலநிலை மாற்றங்கள், சர்வதேச பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற அனர்த்தங்களால் ஏற்படும் பாதகமான விளைவுகள்.

போன்ற சில காரணங்கள் இந்நாடுகளது வறுமையின் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்துள்ளதெனக் கூறப்பட்டது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வறுமைக்கும் இடையிலான தொடர்பை விளக்கும்போது - அது வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் முன்னேற்றத்தை மையப்படுத்தியதாக அமைய வேண்டும். பொதுவாக, பெரும்பாலான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும், வறுமைக் குறைப்புக்குமிடையிலே நேரான தொடர்பு நிலவி வருவதைக் காணலாம். இவ்வகையில் இந்நாடுகளது பொருளாதார நடவடிக்கைகளில் "வறுமைத் தணிப்பு" தொடர்பான செயற்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பொதுவாகப் பொருளாதாரத்தில் கொண்டுவரப்படும் சில சீர்திருத்தங்கள் மூலமாகவும் இதைச் சாதிக்கமுடியும் எனக் கருதப்பட்டது.

உதாரணமாக - விவசாயத்துறை மீது கொண்டுவரப்படும் சந்தைச் சீர்திருத்தங்கள் (Market Reforms) அத்துறையில் உயர்ந்த வளர்ச்சி வீதத்தைக் கொண்டு வந்ததுடன், இச்சீர்திருத்தங்கள் மூலமாகப் பல வறிய மக்கள் நன்மை பெற்றுள்ளதை அவதானிக்கலாம். சிலி (Chile), சீனா (China), கானா (Ghana), உகண்டா (Uganda) மற்றும் வியட்நாம் (Vietnam) போன்ற நாடுகளில் இச்சீர்திருத்தங்கள் குறிப்பாக, மெய்நாணய மாற்றுவீதத்தில் மாற்றங்களை ஏற்படுத்தல், தீர்வைக்குறைப்பு போன்ற வழிமுறைகளினூடாக விவசாயப்பொருட்களின் விலையை அதிகரிக்கச்செய்தல் போன்ற செய்முறைகளின் வாயிலாக விவசாயிகளுக்கு உதவிபுரிந்து, வறுமையைக் குறைப்பதற்குப் பங்காற்றியுள்ளதைக் காணலாம். எனினும், சில நாடுகளின் விவசாயத்துறை மீது கொண்டுவரப்பட்ட தாராண்மைவாதத் தனியார் மயப்படுத்தல் கொள்கைகள் வறிய கிராமிய விவசாயிகள் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. எனவேதான், அமுல்படுத்தப்படப்போகும் கொள்கைச் சீர்திருத்தங்கள் இத்தகைய பாதக விளைவுகளை ஏற்படுத்தாத வண்ணம் வடிவமைக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.



பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அடிப்படைக்கல்வி, சுகாதார வசதிகள் போன்ற பொது முதலீடுகளில் அதிகளவு முதலீடு செய்யப்பட்டபோதும் - இச்சமூக சேவைகளினதும், இவற்றை வழங்கும் நிறுவனங்களினதும் தரம் குறைந்ததாகக் காணப்படுகிறது. இத்தகைய முதலீடுகளும், அவற்றின் சேவைகளும் எதிர்பார்த்தளவை விடக் குறைந்தளவான செயற்திறமையைக் கொண்டிருப்பதற்கு, அவை பொதுமக்களது தேவைக்கமைய பொறுப்பான முறையில் வழங்கப்படாமை பிரதான ஒரு காரணமாகும். தவிர, இச்சேவைகளினது விநியோகம், உள்ளூர் நிறுவனங்களின் திறன்கள், சந்தைக் கட்டமைப்பு, அரசியல் செல்வாக்கு போன்றவற்றில் அதிகளவிற்குத் தங்கியிருப்பதும் இவற்றின் செயற்திறன் இன்மைக்கான பிறிதொரு காரணம் எனலாம். இத்தகைய காரணங்கள் இந்நாடுகளது கிராமிய வறுமையைத் தொடரவே வழிவகுக்கிறது.




பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளில நிலவும் வறுமைக்கும், அவர்கள் எதிர்நோக்கும் அபாய ஏதுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம். 1990 களில் உலகின் பல பகுதிகளில் குறிப்பாக, ஆபிரிக்காவில் நிதி நெருக்கடிகள், நாசம் விளைவிக்கும் இயற்கை அழிவுகள், சமூக முரண்பாடுகள், எயிட்ஸ் (Aids) போன்ற நோய்களது பரவலாக்கம் போன்ற பல்வேறு காரணங்களின் நிமித்தம் அதன் பொருளாதார வளர்ச்சி பலவீனப்பட்டிருப்பதைக் காணலாம்.

பொதுவாகவே வறியமக்கள் - வேலையின்மை, இயற்கை அழிவு, பொருளாதார நெருக்கடி மற்றும் அறுவடைகளில் ஏற்படும் தோல்வி, அகாலமரணம் போன்றவற்றாலும் பலவீனமடைந்திருப்பதைக் காணலாம். ஏனெனில், இவர்கள் குறைந்தளவான சேமிப்பு ஆற்றலையும், குறைந்த சொத்துடமையையும் கொண்டிருப்பதால், தமது இத்தகைய ஆபத்துக்களுக்கு எதிராக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளமுடியாத சூழ்நிலை நிலவுவதால் ஆகும். மேலும், இத்தகைய எதிர்த்தாக்கங்கள், அவர்களுடன் மட்டும் தற்காலிகமாக நின்றுவிடாது, அவர்களது பிள்ளைகளது எதிர்கால வாழ்க்கையையும் கூட (குறைந்த போஷாக்கு, பாடசாலையை விட்டு விலகவேண்டிய சூழ்நிலை போன்றவற்றினால்) பாதிக்கச் செய்கின்றது. இத்தகையதொரு பின்னணியிலும், மூன்றாம் உலக நாடுகளது வறுமையையும், அதன் தாக்கத்தையும் குறைக்கவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுவருகிறது.

மூன்றாம் உலகநாடுகளைப் பொறுத்து அங்கு இன்னமும் வறுமைநிலை இருப்பதற்குரிய காரணங்களில் அந்நாடுகள் வறுமையின் நச்சுச்சூழல் வட்டத்தில் (The Vicious Circle of Poverty) சிக்குண்டிருப்பது என்பதும் கூறப்பட்டது. இக்கருத்தின்படி, இந்நாடுகளது குறை அபிவிருத்திக்கும், வறுமைக்கும் மூல காரணம் - அங்கு மூலதனம் பற்றாக்குறைவாக அமைவதே.

இந்த நச்சுவட்டச் சுழல் நிலையை உடைபதற்குப் பின்வருவனவற்றைக் கையாளலாம்.

1. உள்நாட்டுச் சேமிப்பில் அதிகரிப்பை ஏற்படுத்த முடியாதநிலையில், வெளிநாட்டுச் சேமிப்புக்களைத் திரட்டிக்கொள்ளல் வேண்டும். இதன்வாயிலாக முதலாக்கத்தை உருவாக்கி, வருமானத்தை உயர்த்திக் கொள்ளல்.

2. குடிசன வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி தலாவருமானத்தை உயர்த்தி, சேமிப்பை அதிகரித்துக்கொள்ளல்.

3. இவ்விரு வழிமுறைகளும் நிறைவு செய்யப்படாதபட்சத்தில், அந்நிய உதவியைப் பெற்றுக்கொள்ளல்.

போன்ற சில வழிமுறைகள் முன்வைக்கப்பட்டன.

இலங்கை உட்பட்ட அநேகமாக அபிவிருத்தியடைந்தவரும் நாடுகளின் அரசாங்கங்களால் அங்கு நிலவிவரும் கிராமிய வறுமையைத் தணிப்பதற்கான அல்லது குறைப்பதற்கான கொள்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

இத்தகைய செயற்பாடுகளில் புதிய தொழில்நுட்ப முறைகளின் பிரயோகத்தை அறிமுகப்படுத்துவதன் வாயிலாக, விவசாயத் துறையின் வளர்ச்சியை அதிகரிக்கச்செய்தல் என்பது கிராமிய வறுமையைக் குறைப்பதற்கான முக்கியமான வழிவகைகளில் ஒன்றெனக் கூறப்பட்டது.

எனினும், இத்தகைய செயற்பாடுகள்- கிராமிய விவசாயிகள் மீது ஏற்படுத்தும் தாக்கம் - பொருத்தமான நிறுவனக் கட்டமைப்புக்களிலும், அதற்கான தூண்டுதல்களிலுமே அதிகம் தங்கியுள்ளது.

உதாரணமாக, துணை - சகாரா ஆபிரிக்கா (Sub - Sahara Africa) நாடுகளில் நிலவுகின்ற உணவு உற்பத்தியின் பற்றாக் குறைவு. உயர்வான பொதுவிலை மட்டங்கள் காரணமான அவர்களது விவசாயத்தில் ஒரு தேக்கநிலை உருவாக்கப்படுவதுடன், அது அவர்களின் கொள்வனவுச் சக்தியிலும், புதிய வேலை வாய்ப்புக்களைத் தேடுவதிலும் அவர்களுக்குள்ள தகுதியைக் குறைக்க முயலுகின்றன. மாறாக, தென்னாசியாவின் சில பகுதிகளில் நிலவிய பசுமைப்புரட்சியின் அனுபவங்களின்படி, வேகமான அல்லது விரைவான விவசாய முன்னேற்றங்கள் அங்குள்ள கிராமிய வறுமையைக் குறைப்பதில் பாரியளவில் பங்காற்றியுள்ளதைக் காணலாம்.

கிராமிய வறுமையைத் தணிப்பதற்குச் சந்தைகள், பொதுச்சேவை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள் என்பவை உள்ளடங்கிய பேரினப் பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள்கூட மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் சந்தைகள் என்னும்போது - உற்பத்திப்பொருட்கள், ஊழிய, ஊழியமல்லாத உள்ளீடுகள், முறைசார்ந்த, முறைசாராத நிதிமூலங்கள் போன்றவை அடங்குகின்றன. இச்சந்தைகளில் கிராமிய சிறுநில விவசாயிகள் பெறும் பங்களிப்பை அதிகரிக்கச்செய்வதன் மூலமும் கிராமிய வறுமையைத் தணிப்பதற்குச் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதேபோல, அரசினால் வழங்கப்படும் உள்ளமைப்பு வசதிகள், கிராமியத்துறையினது உற்பத்தித்திறனிலும், போக்குவரத்து தொடர்பு சாதனங்கள், விரிவாக்கச் சேவைகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் உள்ளிட்ட கிராமிய விவசாயியினது வாழ்க்கைத்தரத்திலும் இவை தவிர்ந்த கல்வி, சுகாதார, குடிநீர் வசதி போன்ற சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றங்களிலும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்திவிடுகிறது. இத்தகைய வசதி வாய்ப்புகள் கிராமியப் புறங்களிலுள்ள மனித மூலதனத்தின் மீதும், உற்பத்தித்திறன் மீதும் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துவதனூடாக அவை கிராமிய வறுமையைத் தணிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தகைய நடவடிக்கைகளுக்கும் மேலாகக் கிராமிய விவசாயி ஒருவனின் வாழ்வில் எதிர்பார்த்தோ அன்றி எதிர்பாராவிதமாகவோ ஏற்படும் ஆபத்துகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் காப்புறுதிகள், தனியார் பொதுத்துறையினரால் வழங்கப்படும் மாற்றல்கள் போன்றவற்றை அதிகரித்துக்கொள்வதன் மூலமும் கிராமிய வறுமையைத் தணிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைந்து கொள்வதற்கும், கிராமிய வறுமையைத் தணிப்பதற்கும் என்ற வகையில் மேற்கூறியவாறு பேரினப் பொருளாதார உறுதித்தன்மை, நிறைபோட்டிச்சந்தை மற்றும் பௌதீக சமூக உட்கட்டமைப்புக்களில் பொது முதலீட்டுத் திட்டங்கள் போன்றவை முக்கிய தேவைப்பாடாக உணரப்பட்டிருந்தது.

(தொடரும்)

ஏ.தயாபரன்,
விரிவுரையாளர்,
வவுனியா பல்கலைக்கழகம்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | மருதனார்மடம் | ஊர்காவற்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 15/= | 20/= | 20/= | 40/= | 10/= | 15/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 70/= | 60/= | 70/= | 70/= | * | 70/= |
| கத்தரிக்காய் | 20/= | 30/= | 20/= | 40/= | 20/= | 20/= | 20/= |
| பாகற்காய் | 60/= | 60/= | 30/= | 60/= | 60/= | 25/= | 40/= |
| வெண்டிக்காய் | 15/= | 30/= | 20/= | 30/= | * | 15/= | 20/= |
| முருங்கைக்காய் | 120/= | 100/= | * | 180/= | 200/= | 160/= | * |
| கரட் | 40/= | 40/= | 60/= | 60/= | 60/= | 40/= | 20/= |
| பீற்றூட் | 30/= | 30/= | 20/= | 40/= | 30/= | 30/= | 30/= |
| வெங்காயம் | 40/= | 40/= | 40/= | 40/= | 40/= | 30/= | 30/= |
| பச்சைமிளகாய் | 20/= | 40/= | 25/= | 40/= | 30/= | 25/= | 30/= |



# எந்தவொரு தொழில் முயற்சியிலும் விசுவாசமாக ஈடுபட்டால் முன்னேறலாம்

**தனது பாடசாலைக் கல்வியை க.பொ.த. சாதாரண தரத்துடன் இடைநிறுத்திவிட்டு தொழில்முயற்சியில் இறங்கி, பல்வேறு இன்னல்களை அனுபவித்து, இன்று ஐந்து தொழிலாளர்களைத் தன்னுடன் வேலைக்கு அமர்த்தி மோட்டார் சைக்கிள் சேவிஸ் தொழில் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சுன்னாகத்தைச் சேர்ந்த இளம் தொழில்முயற்சியாளரான வைரமுத்து சிவசுப்பிரமணியம் (சந்திரன்) உடனான சந்திப்பு.**

**மிகவும் குறுகிய காலத்தில் சுயதொழில் மூலம் முன்னணிக்கு வந்த இளைஞர் என்ற வகையில் உங்கள் தொழில் முயற்சியின் ஆரம்பகாலம் பற்றிக் கூறுங்கள்?**

நான் O/L படித்துவிட்டு ரிங்கர் வேலையை தெல்லிப்பளையில் பழகிவந்தேன். தற்போது அந்த இடம் உயர் பாதுகாப்பு வலயம். இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்ந்தபோது, நான் வேலை பழகிய ரிங்கர் தொழிற்சாலையும் மூடப்பட்டுவிட்டது.

பின்பு நான் சுன்னாகம் சந்தைக்குள் தேங்காய் வியாபாரம் செய்து வந்தேன். அக்காலப்பகுதியில் எமது ஊர் பெரியவர் கதிர்காமதாஸ் ஐயா எனக்கு அறிமுகமானார். அவர் ஆரம்பத்தில் எனக்கு எவ்வாறு தேங்காய் வியாபாரம் செய்வது என்பது பற்றித் தன்னுடைய ஆலோசனைகளைச் சொல்லிவந்தார்.

காலகதியில் நான் வலிகாமப் பிரதேசத்தினைவிட்டு வெளியேறி, வன்னிப்பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்றேன். அங்கு எனது வியாபாரம் ஓரளவு நல்லநிலையில் இருந்தது என்றுதான் சொல்லவேண்டும்.

மீண்டும் வன்னிப் பெருநிலப்பரப்பினைவிட்டு, யாழ். குடாநாட்டிற்கு 97 ஆம் ஆண்டு வந்தபோது, அனைத்துச் சொத்துக்களையும் விற்று வெறுங்கையோடுதான் இங்கு வந்தேன். என்னிடம் எந்த முயற்சிக்கும் முதலிடுவதற்குப் பணம் இருக்கவில்லை. இந்தக்காலத்தில் ஏதாவது தொழில் செய்யவேண்டும் என்ற உந்துதல் மட்டுமே என்னிடம் இருந்தது.


மீண்டும் சுன்னாகம் சந்தைக்குள் தேங்காய் வியாபாரத்தினை மேற்கொள்ள எத்தனித்தேன். அப்போது முதல் போடுவதற்கான பணம் என்னிடம் இல்லை. இதனால், பெரிய துன்பத்தினை அனுபவித்தேன். முதல் இல்லாமல் வியாபாரம் செய்யத் தொடங்கி நான் பட்டவேதனை சொல்லிவிடமுடியாது. அவ்வளவு துன்பமும், துயரமும் என்னை வாட்டின.

அந்தத் துன்ப துயரந்தான் என்னை இன்று "மோட்டார் சைக்கிள் சேவிஸ் ஸ்ரேசனை" ஆரம்பிக்கத் தூண்டியது என்று கூறலாம்.

**மோட்டார் சைக்கிள் சேவிஸ் ஸ்ரேசனை ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு உருவாகியது?**

நான் முன்பு சொன்ன கதிர்காமதாஸ் ஐயாதான் இந்த ஐடியாவை எனக்குத் தந்தார். சிறிய முதலுடன் சிறிதளவான வசதிகளுடன் எவ்வாறு செப்பமாகச் சேவிஸ் செய்யலாம் என்பது பற்றிக் கதிர்காமதாஸ் ஐயா எனக்கு விளக்கினார். புதிய அணுகுமுறைகளைச் சொல்லித்தந்தார்.

ஐயா அப்படி விளங்கப்படுத்தியபோதும், எனக்கு எவ்வாறு மோட்டார் சைக்கிள் சேவிஸ் செய்வது? நான் செய்யும் சேவிஸ்களை சனம் (மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள்) ஏற்றுக்கொள்வார்களா என்பது பெரும் ஐயப்பாடாகத்தான் இருந்தது. இந்தத் தொழிலை நான் ஆரம்பித்தபோது, சந்தித்த பெரிய சவால் இதுவாகத்தான் இருக்கமுடியும்.



**உங்கள் தொழில் முயற்சியினைப் பெரும் ஐயப்பாட்டுடன் ஆரம்பித்த நீங்கள் - இன்று மோட்டார் சைக்கிள் சேவிஸ் ஸ்ரேசனோடு பல தொழில் முயற்சிகளை இணைத்துச் செய்து வருகின்றீர்கள். இந்தவகையில் எவ்வாறு தொழில் முயற்சி விஸ்தரிக்கப்பட்டது என்று கூறுவீர்களா?**

மோட்டார் சைக்கிள் சேவிஸ் ஸ்ரேசனுடன் சேர்த்து டயர் வேலைகளையும் ஆரம்பத்தில் செய்துவந்தேன். பின்பு மோட்டார் சைக்கிள்களுக்குரிய இலக்கத்தகடுகளைச் செய்து கொடுத்தேன். அதன் பின்னர் வெல்டிங் வேலைகளையும் ஆரம்பித்திருக்கிறேன். என்னுடன் இப்போ ஐந்து தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

ஒரு வேலையிலிருந்து மற்றைய வேலை தொடர்புபட்டது. இதனால், முதலில் வருகின்ற தொழிலாளி ரயர் வேலைகளிலே ஆரம்பித்து, பின் சேவிஸ் செய்து, நம்பர் பிளேட் (இலக்கத்தகடு) செய்து, பின் வெல்டிங் வேலைகளுக்கு வரவேண்டும். நானும் இவ்வாறுதான் ஆரம்பத்திலிருந்து வந்தேன்.

என்னுடன் வேலை செய்பவர்கள் என்றும் என்னுடன்தான் நிற்கவேண்டும் என்றில்லை. வேலைகளைப் பூரணமாகப் பழகியதும் தாமே சொந்தமாகத் தொழில்களில் இறங்கலாம். அவர்களுக்கு வேண்டியதை நான் நிச்சயமாகச் செய்வேன்.


**நவீன சேவிஸ் ஸ்ரேசன்கள் இருக்கும்போது, உங்கள் குடிசைக் கைத்தொழில் மாதிரியான இந்த சேர்விஸ் ஸ்ரேசனை நோக்கி எவ்வாறு மோட்டார் சைக்கிள் பாவனையாளராகத் திரும்பினீர்கள்?**

நாங்கள் செய்கிற சேவிஸ் திருப்தியாக அமைவதால், எங்களிடம் வந்தவர்கள்- பலரிடம் போய் எமது வேலையைப் பற்றிக் கூறுகின்றார்கள். அவ்வாறு கூறுவதனால், இன்று நம்பமாட்டீர்கள் - பருத்தித்துறை, சாவகச்சேரி பிரதேசங்களிலிருந்தும்கூட எம்மிடம் மோட்டார் சைக்கிள் சேவிஸ் செய்ய வருகின்றார்கள். நாங்கள் குறைந்தது ஒரு மோட்டார் சைக்கிளிற்கு 2 மணித்தியாலங்களைச் செலவழிக்கிறோம்.

தொடக்கத்தில் கிழமைக்கு ஒரு சைக்கிள் என்று வந்தது. இப்போ ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு மோட்டார் சைக்கிள்களும் வருகின்றன. அதேமாதிரிச் சில நாட்களாக எவையும் வருவதில்லை. எப்படிப் பார்த்தாலும் சராசரி ஒரு மாதத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு சைக்கிள் என்ற வீதத்தில் எம்மிடம் சேவிஸ் செய்ய மோட்டார் சைக்கிள்கள் வருகின்றன.

எமக்குப் பெரிய இலாபம் வருகின்றது என்று இல்லை. ஆனால், பெரிய சேவிஸ் ஸ்ரேசன்கள் பாரிய முதலீட்டினைப் போட்டு உழைக்கும் இலாபத்தினைவிட, நாங்கள் ஒப்பீட்டளவில் சிறிதளவாக முதலிட்டு, உழைக்கும் இலாபம் எமக்குத் திருப்தி தருகின்றது.

எனக்கு இலாபம் என்பது முக்கியமில்லை. நாங்கள் தொழில் செய்து முன்னேற வேண்டும். வாழ்க்கையில் என்றுமே இனி என்னைவிட்டு அகலாத தொழிலாகத்தான் இருக்கும். என்றோ ஒரு நாள் நான் ஒரு பெரிய சேவிஸ் ஸ்ரேசனை வைத்திருப்பேன், வைத்திருக்க வேண்டும் என்ற கனவுடன் இருக்கின்றேன்.



**உங்கள் தொழில் முயற்சிக்கு வங்கிகள் எவ்வாறு கடன் தருகின்றன? எப்படி உங்களை வங்கிகள் ஊக்கப்படுத்துகின்றன?**

என்னுடைய தொழில் வாழ்க்கையின் அனுபவத்தின்படி- வங்கிகளிடம் கடன்படுவது என்பது கஷ்டமானதாகவே இருக்கின்றது. நான் ஆரம்பத்தில் 50,000 ரூபாய் கடனை வங்கியிடம் பெற்றேன். அதற்குக்கூட வங்கி அதிகாரிகள் நிறையக் கஷ்டப்பட்டார்கள். என்னால் இந்த 50,000 ரூபாவைத் திருப்பிக் கட்டுவேனா என்று சந்தேகப்பட்டார்கள்.

இதைவிட பிணை நிற்பவர்கள் என்று பெரிய தொல்லை. நான் முன்பு எடுத்த 50,000 ரூபாவை ஒரு தவணைகூடத் தவறாமல் கட்டி முடித்துவிட்டேன். அதன் பின்னர் 1,00,000 ரூபா கடனுக்கு விண்ணப்பித்திருக்கிறேன்.

இப்போது வங்கி என்னிடம் கடனைத் தருவதற்கு காணி உறுதி கொண்டுவா என்று கேட்கிறது. உண்மைச் சொல்லுகிறேன், என்னிடம் எந்தக் காணி உறுதியைக் கொடுப்பதற்கும் சொந்தமான காணிகள் இல்லை. வேறு சொத்துக்களோ, நகைகளோ இல்லை. அவ்வாறிருக்குமாயின் நான் வங்கிகளிடம் ஏன் அலையவேண்டியிருக்கிறது? ஊரில் வட்டிக்குப் பணத்தினை எடுத்துப் போட்டுவிடுவேன்.

இதுதான் எமக்கிருக்கிற கஷ்டம். எங்களிற்குப் போதிய பணமும், நாட்டின் சூழ்நிலை சாத்தியமாகவும் இருக்குமெனின், எந்தவொரு தொழில் முயற்சிகளிலும் விசுவாசமாக ஈடுபட்டால் நாம் முன்னேறித்தான் ஆகவேண்டும். விசுவாசமாக வேலை செய்கிற எங்களுக்குப் பண உதவி கிடைக்க இந்த வங்கிகள் ஏதாவது செய்யவேண்டும்.

இங்கேயுள்ள வங்கிகள் இதனை உணரவேண்டும் என்பதுதான் எனது பெரிய அவா என்று கூறமுடியும்.

**நேர்காணல் - சேந்தன்**


# தொழில் வங்கி



| | |
|---|---|
| நிறுவனம் | ஆயப் பகுதி, கிளிநொச்சி. |
| வெற்றிடமாகவுள்ள பதவி | மேலாளர்கள் |
| அடிப்படைத் தகுதிகள் | வணிக/முகாமைத்துவ உயர் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் |
| விண்ணப்ப முடிவு திகதி | 03-05-2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# ஒரு உயர்வுக்குப் பின்னால்....!



தமிழர் தாயகமெங்கும் உயர்வுற்று வாழும்

- தொழிலாளர்கள்
- வர்த்தகர்கள்
- ஆற்றல்மிகு கடற்தொழிலாளர்கள்
- தொழில் முயற்சியாளர்கள்
- திறமையான விவசாயிகள்
- இன்னும் ஏனையோரும்

தாங்கள் உயர்ந்துவந்த பாதையை - 'நமது ஈழநாடு' வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள ஒரு அரிய வாய்ப்பு.



சுயவிபரத்துடன் - சாதித்த இலக்குகளைக் குறிப்பிட்டு

'ஒரு உயர்வுக்குப் பின்னால்...!'

நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரியுடன் நேரிலோ, தபால் மூலமோ உடன் தொடர்புகொள்ளுங்கள்.
நாங்கள் உங்களுடன் நேரில் கலந்துரையாடியதும், ஒவ்வொரு வாரமும்
'உழைப்போம் உயர்வோம்' தொழில்மலர் பகுதியில் உங்கள் வெற்றிக்கதை பிரசுரமாகும்.
எங்கே தயாராகி விட்டீர்களா?
உங்கள் வெற்றி ஏனையோருக்கும் வழிகாட்டட்டும்!

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்*
*பண்புஇன்மை பாரிக்கும் நோய்.*
*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## ஆக்கமல்ல, அழிவே சிந்தனை!

அமைதிப் பேச்சுவார்த்தைகளிலிருந்து இடைவிலகும் அறிவிப்பை விடுதலைப் புலிகள் வெளியிட்டதன் பின்னர்- கொழும்பில் தோற்றம் பெற்றிருக்கும் பதற்றமும், அதிர்வுகளும் - கொழும்பிலுள்ள அரசியல் சக்திகள் சமாதான முயற்சிகளை எவ்வாறு நோக்குகின்றன என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டின் நியாயத்தையும் - அமைதி முயற்சிகளிலிருந்து விடுதலைப் புலிகள் விலகினால் அது ஏற்படுத்தவிருக்கும் பெரும் தாக்கங்கள் பற்றிய உண்மையையும் உணர்ந்துகொண்ட தரப்புக்கள் ஒருபுறம் என்றால் -

மறுபுறம் - அமைதி முயற்சிகள் குழம்பவும், தமது சந்தர்ப்பவாதத்தையும், யுத்த மனோபாவத்தையும் உறுதிப்படுத்தவும் வாய்ப்புத் தேடியலையும் சக்திகள் - விடுதலைப் புலிகளின் அறிவிப்பை - போர் மூளுவதற்கான அறிவிப்பாகத் திரிபுபடுத்திக்கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஒரு கட்டத்திற்குச் சென்று - முப்படைத் தளபதிகளையும் அழைத்துப் போருக்கான முன்னாயத்தமொன்றுக்குத் தயாராகுமாப்போலான செயற்பாடுகளில் இறங்கிவிட்டார்.

1995 இற்கு முன்னர் எவ்வாறு - வீதித்தடைகள், ரோந்துகள், சோதனை நடவடிக்கைகள் இருந்ததோ அவற்றைப்போல - மீண்டும் பாதுகாப்புக் கெடுபிடிகளை மேற்கொள்ளுமாறும் படைத் தளபதிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் இவ்வாறானதொரு அறிவிப்பை விடுக்கவேண்டி வந்ததன் நிர்ப்பந்தம், அதற்கான காரணங்கள், அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்குச் செய்யவேண்டிய உடனடி நடவடிக்கைகள் பற்றியெல்லாம் கவலைப்படாது -

கிடைத்தது சந்தர்ப்பம் என - மீண்டுமொரு யுத்தத்தைத் தொடங்கும் போக்கில் செயற்படுபவராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடந்திருக்கிறார்.

'நாட்டின் பாதுகாப்பு' என்ற பெயரில் இவ்வாறான திடீர் அதிரடி நடவடிக்கைகளுக்கு உத்தரவிடுபவர், பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லத்தடையாகவிருக்கும் காரணிகளை நீக்குவது பற்றியோ, தானே பலவிடயங்களில் முட்டுக்கட்டையாக இருப்பது தொடர்பாகவோ சிந்தித்துச் - சமாதானச் சூழலைத் தக்கவைப்பதற்கு முயற்சிக்காமலிருப்பது வியப்புக்குரிய விடயமே.

இத்தனைக்கும் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் தற்காலிகமாக விலகிக்கொள்ள எடுத்த முடிவு கவலை தருவதாகக் கூறிக்கொண்டே -

படையினருக்குத் தயார்நிலை அறிவித்தலை விடுக்கும் ஜனாதிபதியின் போக்கு, அமைதியை நாடுவதற்கு எந்தவகையிலும் உதவப் போவதில்லை என்பதை எச்சிறுபிள்ளையுமே உணர்ந்து கொள்ளும்.

நிறைவேற்று அதிகாரத்தைத் தன்வசம் வைத்துக்கொண்டு, முப்படைகளுக்கும் பிரதம தளகர்த்தர் என்ற நிலையில் - பாதுகாப்பு விவகாரங்களில் தான் நினைத்ததைச் சாதிக்கும் பிடிவாதப்போக்குடன் இருக்கும் ஜனாதிபதி - தனது நடவடிக்கைகள் மூலம் அமைதியைக் குழிதோண்டிப் புதைப்பதற்கே ஆர்வமாக இருப்பதைத் தெளிவாக நோக்க முடிகிறது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேற்றம், படைநிலைகளைத் தளர்த்துவதும் - இராணுவப் பிரசன்னத்தைக் குறைப்பதும், கடலில் மோதல்களைத் தணிப்பது என - சுமுகநிலையை உருவாக்குவதிலும் அமைதியை வலுப்படுத்துவதிலுமான முயற்சிகளுக்கு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒப்புதலளிக்காது - நிலைமையைச் சிக்கலாக்குவதற்கு அவரே முக்கிய காரணமாகவிருப்பதும் வெளிப்படையானபோது -

விடுதலைப் புலிகள் எடுத்துள்ள முடிவு சமாதான முயற்சிகளைப் பலவீனப்படுத்துவதாகவும், அடிப்படைகளற்றது எனவும் கூறி - பிரச்சினையைத் திசை திருப்பிவிட அவர் முயல்வதையும் கவனிக்க வேண்டியதாகின்றது.

பேச்சுக்கள் இடைநிறுத்தப்படும் ஆபத்து நேர்கின்றது என்றபோது - படைத்தரப்பை உஷார்படுத்தி தேசிய பாதுகாப்புக்கு உத்தரவிட முனைந்து நிற்கும் அவர் -

தன்னிடமுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, நிலவுகின்ற சமாதானத்தை நீடித்து நிற்கச் செய்ய ஆக்கபூர்வமாக எதுவுமே செய்ய முன்வராதது ஜனாதிபதியின் இரட்டை வேடத்தைத்தான் காட்டுகின்றது.

சமாதானத்திற்கான ஜனாதிபதியின் ஒத்துழைப்பு இந்தளவில் 'திருப்திகரமாக' உள்ளபோது - பிரதமர் ரணிலின் நடவடிக்கைகள் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்கான கடிதத்தில் குறிப்பிட்டது போல - தகுந்ததொரு பதிலைத் தந்து, சமாதான முயற்சிகளை மீண்டும் தொடரவைக்குமா என்பதை இனிவரும் நாட்கள்தான் சொல்லவேண்டும்.

அதேவேளை - நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து- ரணிலின் அரசாங்கம் சமாதானத்தை உறுதிப்படுத்த - விடுதலைப் புலிகள் குறிப்பிட்ட விடயங்களில் ஆக்கபூர்வமாகச் செயற்படத் தவறுமாயின், தாமதிக்குமாயின் - அமைதிக்கு விரோதமான சக்திகளுக்கு வெற்றி வாய்ப்பளிப்பதாகவே, கிடைத்த அரியதொரு சந்தர்ப்பத்தையும் நழுவவிட்டதாகவே அமைந்துவிடும்.

# சொந்த இடத்துக்கு போக விடுங்கோ; நிம்மதியாக நாங்கள் வாழ வேணும்!

**வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து மல்லாகம், கோணப்புலம் அகதிமுகாமில் பல வருடங்களாக அகதிகளாக வாழ்ந்துவரும் மக்கள் தமது உள்ளக்கிடக்கையை விபரிக்கின்றனர்.**

**சந்திப்பு :- சேந்தன், லிவிங்ஸ்டன்.**

### நடேசன் டேவிற் *(வயது 42)*

1990 ஆம் ஆண்டு ஊறணியிலிருந்து அகதியாக இடம்பெயர்ந்த நான், இப்போதும் அகதியாகத்தான் இருக்கிறேன்.



நான் இங்கு கரைவலை வியாபாரம் செய்கின்றேன். இதனால், ஓரளவு குடும்பத்தைப் பார்க்கக்கூடியதாகவுள்ளது. இங்கு கஷ்டத்துக்கு மேல் கஷ்டத்தை அனுபவிக்காமல் எமது சொந்த ஊருக்குப் போகத்தான் எனகது விருப்பம்.

அங்கு போனால் வேறு தொழில்கள் செய்யலாம். இஞ்ச கரைவலையில் மீன்பட்டால்தான் வியாபாரம் செய்யலாம். சில நேரம் மீன்படாது. எனக்கு ஏழு பிள்ளைகள், அதோட தொழிலுக்குப் போவதற்கு நீண்டதூரம் சைக்கிள் ஓடவேண்டும். இதனால சரியான கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியிருக்கு. ஆனால், ஊருக்குப் போனால் இப்படிக் கஷ்டத்தை அனுபவிக்கத் தேவையில்லை.

### சின்னத்தம்பி சிவானந்தராஜா. *(வயது - 41 )*

எங்கட சொந்த இடம் ஊறணி. நாங்கள் இடம்பெயர்ந்து வன்னிக்குப் போய் கஷ்டங்களை அனுபவித்தாலும், சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் இருந்தோம்.



பிறகு பாதை திறந்த பின்னர் இஞ்ச வந்து அலங்கோலப்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

நாங்கள் இஞ்ச வந்து கரைவலை தான் இழுக்கிறோம். கரைவலை இழுத்தால் முன்னுக்குவர இயலாது. பின்னுக்குத்தான் போகலாம். ஊறணியில எண்டால் காபர் வேலை, மேசன் வேலை அல்லது எங்களால இயலக்கூடிய ஏதாவது வேலைசெய்வோம். இஞ்ச ஒரு வேலையும் இல்லை.

அகதிமுகாம் வாழ்க்கை எங்களுக்குச் சரியான கஷ்டம். நாங்கள் எங்கட சொந்த இடத்துக்குப் போகத்தான் விரும்புகிறோம். அங்க போனால், சுதந்திரமாக வாழலாம். எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல், மற்றவருடைய அடிமையாக இல்லாமல், யாரும் எங்களை அகதி எண்டு பேசாம, எங்கட வளவில சாப்பிட்டால் என்ன, சாப்பிடாட்டி என்ன எங்கடபாட்டில சந்தோஷமா வாழலாம்.

### முருகமூர்த்தி சகாயராணி *(வயது- 45)*

நாங்கள் இடம்பெயர்ந்து வன்னிக்குப் போய் அங்க ஐஞ்சு வருடம் இருந்தோம். அங்க எங்களுக்கு வீடு கட்டித் தந்தார்கள்.



எந்தவித பிரச்சினையும் இல்லாமல் இருந்தோம். பாதை திறந்தபின்னர் இங்க வந்த பிறகு எமக்கு எந்தவித உதவியும் செய்யவில்லை. நாங்கள் இஞ்ச வந்து ஒரு வருடமாச்சுது. ஆனால், எமக்கு இதுவரை நிரந்தர வீடு அமைச்சு தருவதற்கு ஒருவரும் முன்வரவில்லை. பலபேர் வந்து சும்மா பதிஞ்சினம். ஆனால், ஒண்டும் செய்யவில்லை. எனக்கு ஒன்பது பிள்ளைகள். இந்த சின்ன இடத்துக்க என்னெண்டு சீவிக்கிறது. இதுக்குள்ளதான் சமைக்கிறது, படுக்கிறது என்றால் என்ன செய்யிறது.

எங்களை, ஊருக்குவிட்டால் எங்கட காணியில் நாங்கள் நிம்மதியாக இருப்போம். இஞ்சத்தை வாழ்க்கையை நினைத்தால் எனி வாழ்ந்து என்னத்திற்கு என்று கிடக்குது.

### கணபதி குணசிங்கம் *(வயது - 49)*

90 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த நாங்கள்- சாவகச்சேரி, கொடிகாமம் என்று பல இடங்களுக்குப் போய் கஷ்டப்பட்டுவிட்டு, இறுதியா இஞ்ச வந்து இருக்கிறோம். இஞ்சேயும்



எங்களுக்கு நிம்மதியான சீவியம் இல்லை. எங்கள இஞ்ச கேவலமாக நினைச்சு, அகதி என்ற அடிப்படைக் கொள்கைளை வைத்து ஒரு குறிப்பிட்ட இடத்தில எங்களை வைத்திருக்கினம். எங்களுக்கு எங்கட இடத்திற்குப் போவதுதான் முக்கிய பிரச்சினை. இஞ்ச தண்ணீர் வசதியோ, மலசலகூட வசதியோ எதுவும் இல்லை. அதோட துப்பரவும் இல்லை. இஞ்ச தொழிலும் இல்லை. எங்கட இடத்துக்குப் போனால்தான் எங்களுக்குத் தொழில் செய்யக்கூடிய வசதி கிடைக்கும்.

### பொன்னுத்துரை இன்பகரன் *(வயது - 41)*

இஞ்ச குடிநீர் இல்லை. அதோட இஞ்ச இருபத்தெட்டுக் குடும்பங்கள் இருக்குது. ஆனால், இரண்டு மலசலகூடங்கள் தான் இருக்குது.



குளிக்க, முழுகவும் இஞ்ச ஒரு கிணறுதான் இருக்குது. அதுவும் கோடைகாலம் வந்தவுடன் வத்திப் போயிடும். இதால இஞ்ச இருக்கிற பொம்பிளையள், சின்னப்பிள்ளையள் சரியான கஷ்டப்படுகினம்.

நான் சீவற்தொழில் செய்யுறனான். இஞ்ச சீவுவதற்கு மரம் எடுக்கச் சரியான கஷ்டம். ஏனென்றால், இஞ்ச எங்களுக்கு ஆட்களைத் தெரியாது. இதால சில தொழிலாளர்கள் சீவுவதற்கு மரம் இல்லாமல், தொழில் செய்யாமல் இருக்கிறினம். ஏனென்றால் சிலபேர் தங்கட மரங்களைக் குடுக்கமாட்டினம்.

எங்களுக்குஒன்றும் செய்யவேண்டாம். எங்கட இடத்துக்கு எங்கள போகவிட்டாலே காணும்.

### திருஞானம் ஜெகஞானம் *(வயது -17)*

எங்கட சொந்த இடத்தில இருக்கிற நிம்மதியான வாழ்க்கை- இடம்பெயர்ந்து இருக்கும்போதுதான் தெரியுது. நாங்கள் இடம்



பெயர்ந்து வந்தாப்போல, எங்களை கீழ்ப்பட்ட ஆக்களாக நினைக்கினம். இவையள் நினைக்கினம் - நாங்கள் வீடு இல்லாமல், வாசல் இல்லாமல் இஞ்ச வந்தனாங்கள் என்று. இதால எங்களை அடிமையாக எண்ணுகினம்.

எனக்கு எங்கட ஊரப்பற்றி தெரியாது. நான் நாலு வயதில ஊரை விட்டு வெளிக்கிட்டதால, ஊர் நிலைமைகள் எனக்குத் தெரியாது.

### சந்திரன் இந்திராதேவி *(வயது - 35)*

நாங்கள் பலாலியில இருந்து இடம்பெயர்ந்து தற்காலிக கொட்டகை அமைச்சு ஐந்து வருடம் மல்லாகத்திலை இருந்தம். பிறகு முன்னேறிப் பாய்ச்சலோட மல்லாகத்திலிருந்து வெளிக்கிட்டு வேற இடத்துக்குப் போனோம்.



பிறகு அங்க இருந்து இஞ்ச வந்திருக்கிறோம். இஞ்ச இருக்கிறதுக்கு ஒரு வசதியும் இல்லை. இஞ்ச நாங்கள் வரேக்க 25 ஆயிரம் தந்தினம். இது எங்களுக்கு நல்ல கொட்டில் போடக் கூடக் காணாது. இதால கிடுகு வாங்கித்தான் மேஞ்சிருக்கிறோம். இஞ்ச சிலநேரத்தில ரெண்டு மாத்துக்கு ஒருக்கா நிவாரணம் தருவினம். சிலநேரம் 15 நாட்களுக்கு ஒருக்கா நிவாரணம் தருவினம். சிலநேரம் பாதிக்கட்டமாக நிவாரணம் தருவினம். எனக்கு ரெண்டு பிள்ளைகள். இதால எங்களுக்குக் கஷ்டம். எங்களுக்கு ஒண்டும் தராவிட்டாலும் சொந்த இடத்துக்குப போகவிட்டாலே காணும். அங்க உழைச்சு சீவிப்போம்.



# குறைதீர் மன்றம்

யாழ். நகரப் பகுதிகளிலுள்ள வீதிகளைத் திருத்துவதற்கு, ஓராண்டு காலத்துக்கு மேலாக யாழ். மாநகரசபையினால் எவ்விதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஒழுங்கான வீதி விளக்குகள் இல்லாத மாநகரம் யாழ்ப்பாணமாகத்தான் இருக்கமுடியும்.

95 இற்கு முன்னராவது, வீதியில் மண்ணெண்ணெய் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன ஆனால் இப்போது மின்விளக்குகளை பொருத்த நடவடிக்கை எடுக்க முடியாதா? அத்தோடு போக்குவரத்துக்கு அவசியமான வேகத்தடைகள், **No Parking** குறியீடுகள் போடப்பட வேண்டும். இவை வைத்தியசாலைக்கு முன்பாக மிக அவசியமானது என்பதை அனைவருமே அறிவார்கள். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்ன பதில் கூறுகின்றார்கள்?

**இனியவன்,**
**யாழ்ப்பாணம்.**

**நமது ஈழநாடு**

தங்களின் கடிதம் தொடர்பாக நாம் மாநகரசபை ஆணையாளருடன் தொடர்பு கொண்டபோது, அவர் பின்வரும் பதிலை எமக்கு அளித்தார்.

"வீதிகள் செப்பனிடுவதற்கான தார், வாகனம் போன்றவற்றோடு ஊழியரும் எம்மிடமிருந்தபோதிலும், வீதி செப்பனிடத் தேவையான கற்களைப் பெறுவது மாநகர சபைக்குப் பெரும் சிரமமான ஒன்றாக இருக்கின்றது. முன்னர் கற்களைப் பெற்றுவந்த இடங்கள் தற்போது உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளமையே இதற்கான காரணமாகும்.

அத்தோடு, அண்மையில் நாம் யாழ்.போக்குவரத்துப் பொலிஸாருடன் இணைந்து வீதியின் பல பகுதிகளில் போக்குவரத்துக் குறியீடுகளை நிறுவியுள்ளோம். ஆனால், சில வர்த்தகர்களும், வாகன உரிமையாளர்களும் இதனை பின்பற்றுவதாகத் தெரியவில்லை.

மின்சார விளக்குகள் பொருத்துவதனால் மாநகரசபைக்கு விளக்கு ஒன்றுக்கு 2500 ரூபா தேவைப்படும். இந்த நிதியை மாநகரசபை பொறுப்பேற்க வேண்டும். இதற்கான நிதி எம்மிடம் போதியளவு இல்லை" என்று தெரிவித்தார்.

# ஈழப்போரை சுமப்பவர்களாக மாறியுள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள்

அண்மையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குப் போயிருந்தேன். ஒரு நோயாளியுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார் -அந்த வோர்ட்டிலுள்ள முதிய நோயாளிகளில் கணிசமான தொகையினர் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு இங்கே தனித்திருப்பவர்கள் என்று. அதில் ஒருவர் புதியதாய் சில தினங்களுக்கு முன்புதான் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருடைய உடலில் ஒரு பக்கம் இயங்காது விறைதத்துவிட்டது என்று கூறப்பட்டது. தானாக நடமாட முடியாதிருந்த அவரைக் கட்டிலில் தூக்கிக் கிடத்த அவருக்கு உதவிக்கு நின்ற பெண்ணால் முடியவில்லை. பக்கத்துக் கட்டில்களில் உதவிக்கு நின்றவர்களும் சேர்ந்து அவரை, அவரது ஒரு பக்கம் விறைத்த கை, கால்களோடு சேர்த்துத் தூக்கிக் கிடத்த மிகவும் பிரயத்தனப்பட்டார்கள்.

அப்பொழுது என்னுடன் கதைத்துக் கொண்டிருந்த நோயாளி சொன்னார் - அந்தப் பெண் அண்மையில் தான் தனது பிள்ளைகளைப் பார்க்க வெளிநாடுகளுக்குப் போய், ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வந்தவராம். அந்த நாடுகளின் சுவாத்தியம் ஒத்து வரவில்லையாம். எனவே ஊர் திரும்பிவிட்டாராம். திரும்பி வந்த கையோடு வருத்தமாக்கிவிட்டதாம்...

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல பொதுவாகவே ஈழத்தமிழர் மத்தியில் இத்தகைய பெற்றோரின் தொகை அதிகரித்து வருகிறது. பிள்ளைகளிருக்கவும் மலடுகளாய்ப் போயினர் எமது பெற்றோர். அவர்களிடம் காசு உண்டு. எல்லா வளங்களும் உண்டு. ஆனால், எவ்வளவு தான் காசு கொடுத்தாலும் அகற்றிவிட முடியாத கொடுமையான தனிமையும் உண்டு. இந்தத் தனிமையே பல நோய்களுக்கும் காரணம். இம்முறை சமாதானம் - சிதறிக் கிடந்த குடும்பங்களைத் தற்காலிகமாக வேனும் சேர்த்து வைத்திருக்கிறது. அது பிரிந்து வாழ்ந்த பெற்றோரையும், பிள்ளைகளையும், பாட்டன், பாட்டிகளையும், பேரக்குழந்தைகளையும் எப்படியோ சந்திக்க வைத்துவிட்டது. ஒன்றில் பிள்ளைகள் ஊருக்கு வருகிறார்கள் அல்லது பெற்றோரைத் தமது நாடுகளுக்கு அழைக்கிறார்கள். சிறிதுகாலம் தமது பிள்ளைகள், பேரக் குழந்தைகளுடன் சந்தோசமாக இருந்துவிட்டு ஊர்திரும்பும் பெற்றோரை மறுபடியும் அதேகொடிய தனிமை முன்னரைவிடப் பலமாகக் கவ்விக் கொள்கிறது. தொலைபேசியில் தமது பிள்ளைகளோடு மணித்தியாலக் கணக்காகக் கதைக்க முடிந்தாலும் கூட, கதைத்து முடித்தவுடன் அதே தனிமை ஒரு பிசாசைப்போல அவர்களின் மீது இறங்கிவிடுகிறது.

ஒருபுறம் தமிழரின் புலப்பெயர்ச்சி, மூன்றாவது மிலேனியத்துத் தமிழனின் புதுப்பலமாக, புதுப்பரிமாணமாக மாறிவரும் அதேவேளை, முதிய பெற்றோரைப் பொறுத்தவரை நிரப்பப்படவியலாத கொடிய வெறுமையுள் அவர்களைத் தள்ளிவிட்டிருக்கிறது. தமிழரின் புலப்பெயர்ச்சி இரண்டு திசைகளில் நிகழ்ந்தது. முதலாவது- இந்தியாவை நோக்கி நிகழ்ந்தது. இரண்டாவது - ஐரோப்பியாவை, அமெரிக்காவை நோக்கி நிகழ்ந்தது.

முதலாவது புலப்பெயர்ச்சி 80 களின் முற்கூறில் குறிப்பாக, 83 ஜூலையுடன் தொடங்குகிறது. இங்கிருந்துபோன தமிழ் அகதிகள் அங்கே இந்தியாவில் பெரும்பாலும் புயற்தடுப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டார்கள். அவர்கள் அநேகமாக நிவாரணத்துக்காகக் காத்திருக்கும் வறிய அல்லது கீழ், மத்திய தர வர்க்கத்து அகதிகளாயிருந்தார்கள். இரண்டாவது புலப்பெயர்ச்சி சற்றேறக் குறைய முதலாவதுக்குச் சமாந்தரமாகத தொடங்கியது. 80 களின பிற்கூறில் இந்தியாவுடன் உண்டாகிய கசப்பினாலும், அதோடு 80 களில் ஏற்கனவே தொடங்கி விட்டிருந்த ஒரு போக்கின் வேக வளர்ச்சியாகவும் எழுச்சி பெற்ற புதிய புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒன்று குறுகிய காலத்துள் உலகின் கவனத்தை ஈர்த்துவிட்டது.


போராட்ட வேர்கள் அகலவில்லை

தொடக்கத்தில், 80 களில் புலப்பெயர்ச்சி ஒரு கோழைத்தனமான தப்பியோட்டம் என்று இகழப்பட்டது. தமிழர்களைப் புலம்பெயர வைத்தவர்களும், அதன் மூலம் தமிழர்களின் இனத்துவம் திரைந்து போய்விடும் அல்லது நீர்த்துப் போய்விடும் என்றே கற்பனை செய்தார்கள். ஆனால், 90 களில் நிலைமை தலைகீழாகியது. புலம்பெயர்ந்த தமிழர்கள் திரைந்து போய்விடவில்லை, கரைந்துபோய் விடவில்லை. அவர்கள் ஈழப்போரின் பின்பலமாக மாறத் தொடங்கினார்கள். எது பலவீனம் என்று கருதப்பட்டதோ அதுவே சில தசாப்பங்களில் பலமாக மாறியது. குறிப்பாக இந்தியாவுடனான இடைவெளி அதிகரிக்க அதிகரிக்க - அமெரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகளில் எழுச்சி பெற்றுவந்த புலம் பெயர்ந்த தமிழ்ச்சமூகம்- படிப்படியாக ஈழப்போரின் நிதிப் பின்தளமாக உருவாகலாயிற்று.

இப்பொழுது ஈழப்போரின் காசு காய்க்கும் மரம் அது. முன்பு, 80 களில் இந்தியாவை நோக்கிப்போன அகதிகளைப் போன்றவர்கள் அல்ல இந்த ஐரோப்பிய அகதிகள். இந்தியாவுக்குப்போன அகதிகள் பிராந்திய அரசியலின் சூதான வியூகத்துட் சிக்கி, எந்த வேளையும் திருப்பி அனுப்பப்படக் கூடியவர்களாயிருந்தார்கள், இருக்கிறார்கள். இந்தியப் பின்தளமும், பிராந்திய அரசியல் அபிலாசைகளுக்கேற்ப பொறிநதுவிடக்கூடிய ஒன்றாயிருந்தது. பின்னாளில் பொறிந்தும் விட்டது. ஆனால், ஐரோப்பாவின் அகதிகளோ பலசாலிகள். அவர்களை அவ்வளவு சுலபமாகப் பிடுங்கி எறியமுடியாது. அவர்கள் இந்தியாவுக்குப்போன அகதிகளைப்போல ஏழைகளுமல்ல. மாறாக அவர்கள்தான் இப்பொழுது ஈழப்போரின் வற்றாத நீரூற்றுக்கள்.

இந்தியாவிலிருந்த அகதிகள் - ஈழப்போரின் சுமையாகக் காணப்பட்டார்கள். ஆனால் - அமெரிக்காவில், ஐரோப்பாவில், அவுஸ்திரேலியாவில் இருப்பவர்களோ ஈழப்போரையே சுமப்பவர்களாக மாறி வருபவர்கள் மட்டுமல்ல, அவர்கள் இனியும் கனகாலத்துக்கு அகதிகள் அல்ல. புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் பிரஜைகளாகவும் மாறி வருகிறார்கள். பிறகொருகாலம் அவர்கள் அந்தந்த நாடுகளின் அரசியலில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் ஒரு சனத்தொகையாக மாறுவார்கள் என்பதற்குரிய அறிகுறிகள் இப்பொழுதே தென்படத் தொடங்கி விட்டன.

அத்தோடு, இன்னுமொன்று முக்கியமானது. புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமதிகம் ஜனநாயகப் பண்புகளை உடையவர்களாக மாறி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக, அடுத்த தலைமுறைத் தமிழர்கள் அநேகமாக ஐரோப்பியச்சாயலோடு, ஐரோப்பாவின் அதே ஜனநாயகப் பண்புகளைப் பிரதிபலிப்பவர்களாக உருவாகப் போகிறார்கள். கடந்த 15 மாதகால யுத்தநிறுத்தத்தில் பெருமெடுப்பில் வந்துபோகும் முதல் தலைமுறை அகதிகளின் பிள்ளைகளிடம் அதாவது, இரண்டாவது தலைமுறையிடம் இதைச்செறிவாகக் காண முடிகிறது. ஜேர்மனியிலிருந்து வந்த ஒருவர் சொன்னார் - தனது மிகச் சிறிய மகனுக்குத் தான், அடிக்க நேர்ந்தால் அவன் சொல்வானாம் 'பொலிஸுக்கு அறிவிப்பேன்' என்று. இது எப்படி அவனுக்குத் தெரியும் என்று கேட்டேன், அவர் சொன்னார்- அவர்களுடைய பள்ளிக்கூடங்களில் மிகச் சிறு பராயத்திலேயே மனித உரிமைகள் பற்றிச் சொல்லிக் கொடுத்து விடுகிறார்கள் என்று.

முதலாம் தலைமுறை அகதிகள் தாய் நிலத்திலிருந்து கொண்டு போன நல்லதையும், கெட்டதையும், விழல்களையும் எல்லாவற்றையுமே விடாமல் பொத்திப் பொத்திப் பாதுகாக்கிறார்கள்தான். ஆனால், இரண்டாம் தலைமுறையோ அல்லது மூன்றாம் தலைமுறையோ வேரில் காணப்பட்ட விழல்கள் பலவற்றிலிருந்து விடுபட்டெழுவதைக் காண முடிகிறது. இங்கே, இந்த இடத்தில் ஒன்றைத் தெளிவுபடுத்தவேண்டும். புகலிட நாடுகளில் காணப்படும் ஜனநாயக அமைப்பு பூரணமானது என்றோ அல்லது அது வெள்ளையர்கள் அல்லாதவர்களை முழு அளவில் கௌரவமாக நடத்துகிறது என்றோ கூறுவது இப்பத்தியின் நோக்கமல்ல. மாறாக, புலம்பெயர்ந்த தமிழர் அதிகமதிகம் ஐரோப்பிய மயப்பட்டு, அமெரிக்கமயப்பட்டு வருகிறார்கள் என்பதும், ஒப்பீட்டளவில் அவர்களிடம் ஜனநாயகப் பண்புகள் மேலோங்கி வருகின்றன என்பதும், எதிர்காலத்தில் இது முழுத்தமிழ்ச் சமூகத்தின் மீதும் ஏதோவொரு விதத்தில் தாக்கம் செலுத்தக்கூடியது என்பதுமே இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. இதற்கு ஆசியாவில் ஏற்கனவே ஒரு முன்னுதாரணம் உண்டு. யூதர்கள் ஐரோப்பாவிலிருந்து இஸ்ரேலுக்கு வந்தபோது, ரஷ்ய கம்யூனிஸத்தின் கூட்டுப்பண்ணை அமைப்பையும், ஐரோப்பிய ஜனநாயகத்தின் விழுமியங்களையும் கொண்டு வந்தார்கள். இஸ்ரேலை உருவாக்கிய போது அவர்கள் இரண்டையுமே அற்புதமாகக் கலந்தார்கள். ரஷ்ய கம்யூனிஸத்தின் கூட்டுப்பண்ணை அமைப்பை அதிகபட்சம் ஜனநாயகமயப்படுத்தி, வினைத்திறன்மிக்க ஒரு வெற்றிகரமான முன்மாதிரி அமைப்பாக மாற்றினார்கள். தம்மைச் சுற்றிலும் அநேகமாக மன்னராட்சி நாடுகளே காணப்பட்ட ஒரு பின்னணியில், யூததேசம் மட்டும் ஒப்பீட்டளவில் ஜனநாயக பூர்வமாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒரு அரசைக் கொண்டிருக்கிறது.

இதையெல்லாம் இங்கு கூறுவது என்பது யூதர்கள் இப்பொழுது பலஸ்தீனர்களுக்குச் செய்துவரும் கொடுமைகளையெல்லாம் இப்பத்தி நியாயப்படுத்துகிறது என்ற அர்த்தத்தில் அல்ல. மாறாக, மன்னராட்சி நாடுகளையுடைய மேற்காசியப் பின்புலத்தில், அதுவும் சதாமோதலுக்குத் தயாரான எதிரிகள் எனும் கடலால் சூழப்பட்ட ஒரு சிறு தீவைப் போலிருந்த போதிலும்கூட யூததேசம் - ஆகக்குறைந்த பட்ச ஜனநாயகப் பண்புகளையாவது பேணுவது என்பது மிக அரிதான ஒரு புறநடை என்பதோடு, இதையெல்லாம் யூதர்கள் தமது புலம்பெயர்வாழ்வின் பேறாகவே பெற்றார்கள் என்பதுமே இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை.

யூதர்களுக்கு அடுத்தபடியாக ஆசியாவில் அதிகளவு ஐரோப்பியமயப்பட்டுவரும் அதாவது, மேற்கத்தைய மயப்பட்டுவரும் ஒரு சனத்தொகையாக ஈழத்தமிழர்கள் காணப்படுகிறார்கள். மொத்த சனத்தொகையில் சற்றேறக்குறைய மூன்றில் ஒரு பங்கு ஈழத்தமிழர்கள் இப்பொழுது புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். இவ்விதம் ஈழத்தமிழர் அதிகம் மேற்கத்தைய மயப்பட்டுவரும் ஒரு பின்னணியில் வைத்தே இப்பொழுது நிலவும் சமாதான முயற்சிகளையும் விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஏன் இலங்கைத்தீவின் சமாதானத்தில் இவ்வளவு அக்கறை காட்டுகின்றன என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.


உறுதியாய் நிமிரும் தமிழினம்

**நிலாந்தன்**

இம்முறை வழமைக்கு மாறாக நீண்டுசெல்லும் யுத்தநிறுத்தம், புலம்பெயர்ந்த தமிழர்களை பெருமெடுப்பில் தாய் நிலத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது. புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகம் ஒரு புதுச் சக்தியாக எழுச்சிபெற்றபிறகு வந்திருக்கும், ஒப்பீட்டளவில் மிக நீண்ட யுத்தநிறுத்தம் இது என்பதால், மேற்கத்தையமயப்பட்டு வரும் தமிழரும், தாய்நிலத்துத் தமிழரும் பரஸ்பரம் தமது அனுபவங்களைப் பரிமாறவும் தேவையான வாய்ப்புக்களை இம்முறை சமாதானம் பரந்தளவில் திறந்துவிட்டுள்ளது. குறிப்பாக, இரண்டாம் தலைமுறை அகதிகளும், மூன்றாம் தலைமுறை அகதிகளும் தமது வேர்களைப் புதுப்பித்துக்கொள்ளும் வாய்ப்புக்களைப் பெருமெடுப்பில் உருவாகியுள்ளன. யுத்தகாலத்தில் அதிகபட்சம் நிதிப் பின்களமாகக் காணப்பட்ட புலம்பெயர்ந்த சமூகம், யுத்தநிறுத்த காலத்தில் அதைவிடப் பரந்தகன்ற அர்த்தத்தில் முழு அளவிலான ஒரு பொறியாத பின்தளமாக, தாய்நிலத்தின் மீது ஒரு புதுச்சக்தியைப் பாய்ச்சவல்ல ஒரு சனத்திரளாக உருவாகி வருகிறார்கள் என்பதை - தாய்நிலத்துத் தமிழரும், புலம்பெயர்ந்த தமிழரும் பரஸ்பரம் புரிந்துகொள்ளத் தேவையான சந்திப்புக்களைச் சமாதானம் ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

இனிமேல், ஈழப்போர் எடுக்கப் போகும் எந்தவொரு புதிய திருபபத்திலும், புலம்பெயர்ந்த தமிழரகளின் பங்கெனப்படுவது இன்றியமையாத ஒன்றாகவேயிருக்கும்.

நன்றி: ஈழமுரசு

## க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் தொழில்நுட்ப பாடங்கள் அறிமுகம்!

### 30 பாடசாலைகளில் பரீட்சார்த்த முயற்சி

(கொழும்பு)


கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தொழில்நுட்பப் பாடங்களைக் கற்பிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

முதற்கட்டமாக, தொழில்நுட்பப் பாடங்களைப் போதிப்பதற்கு 30 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகக் கல்வி அமைச்சின் உயரதிகாரியான கலாநிதி யு.பி. குணரத்ன தெரிவித்தார்.

பரீட்சார்த்த அடிப்படையிலேயே 30 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும், அங்குள்ள வளங்களை அடிப்படையாகக் கொண்டே இத் தெரிவு இடம்பெற்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிவில் தொழில்நுட்பம், இயந்திரவியல் தொழில்நுட்பம், இலத்திரனியல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம், உணவு பதனிட்ல் தொழில்நுட்பம், விவசாயத் தொழில்நுட்பம் ஆகிய ஆறு பாடங்கள் இந்தப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும்.

2005 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சையில் முதன்முறையாக இந்தத் தொழில்நுட்பப் பாடங்களுக்கும் மாணவர்கள் பரீட்சை எழுதுவார்கள் என்றும் கலாநிதி குணரத்ன மேலும் தெரிவித்தார்.



யாழ். மடம் வீதிப்பகுதியில் கசிப்பு விற்றுவந்த பகுதிக்குள் நுழைந்த, கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் - அங்குள்ள கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களை அழித்ததுடன், சம்பந்தப்பட்டவர்களை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தவும் ஆவன செய்தனர். கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் அழிக்கப்பட்டிருப்பதை முதலாவது படத்திலும் - இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சில மணித்தியாலங்களின் பின் மீண்டும் கசிப்பு உற்பத்தி செய்வது ஆரம்பிக்கப்பட்ட அப்பகுதியிலுள்ள குடிசையொன்றையும், றைவாகக் கசிப்புக் காய்ச்சப்படுவதையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள் - எவ்.எக்ஸ். சுதர்சன்)

# கட்டடப் பொருள் எடுத்துவருவதற்கான வழிமுறைகள் செயலகத்தில் ஆராய்வு

யாழ். மாவட்ட சூழல், சுற்றாடல், பாதுகாப்பு, கட்டடத் தொழில்நுட்ப மதியுரைஞர் குழுவின் முதலாவது கூட்டம், நேற்று யாழ். அரச செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ். அரச செயலக மேலதிக அரசாங்க அதிபர் பணிமனையில், திட்டப் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை தலைமையில் நேற்றுக்காலை இடம்பெற்ற இக்கூட்டத்தில் - கட்டடத் திணைக்கள அதிகாரிகளும், பிரதேச செயலர்களும், பொறியியலாளர்களும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், தூத்துக்குடியிலிருந்து கப்பல் மூலம் கற்கள் கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டதுடன், வவுனியாவில் இருந்தும் கற்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவருவதெனவும் திர்மானிக்கப்பட்டது.

தற்போது மணல் அகழ்வு செய்யும் பிரதேசங்களில் - சூழலைப் பாதிக்காத வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினரின் அனுமதியுடன் மணலை அகழ்வதெனவும்,

ராஜன் நகரில் ஒரு லட்சம் கியூப் மணல் அகழக்கூடிய வாய்ப்புள்ளதால், இராணுவத்தினரின் அனுமதியுடன் அங்கு மணலை அகழ்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### பணிப்பாளராகப் பதவியேற்பு

யாழ்.செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருநாவுக்கரசு மகேஸ்வரகுமார், மாவட்ட சமுர்த்தி ஆணையாளராகப் பதவியேற்றுள்ளார்.

இதுவரை காலமும் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய மகாலிங்கம் ஓய்வுபெற்றதனைத் தொடர்ந்து, சமுர்த்தி ஆணையாளராகக் கடமையாற்றிய நா.சிவபாதம் பிரதித் திட்டமிடல் பணிப்பாளராகப் பதவியேற்றுள்ளார்.

அத்துடன், கடல் மணலை அகழக் கூடிய பிரதேசங்களில், கடல் மணலை அகழ்வது தொடர்பாகவும், மலேசியாவிலிருந்து மரங்களை இறக்குமதி செய்வது தொடர்பாகவும் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது. (லி,ரா)

# காங்கிரஸ் புலிகளுடன் இணைந்து மேதின விழாவைக் கொண்டாடும்!

## விநாயகமூர்த்தி எம்.பி. அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இவ்வருட மேதின விழாவை யாழ்ப்பாணத்தில் கூட்டமைபபின் ஏனைய கட்சிகளுடனும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் சேர்ந்து கொண்டாடவுள்ளது என, அகில இலங்கைத் தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி. விநாயகமூர்த்தி அறிவித்துள்ளார்.

தமிழினம் விடுதலைப் புலிகளின் பின்னால்தான் நிற்கிறது என்பதைக் காட்டவும், கூட்டமைப்பும், விடுதலைப் புலிகளும் ஒருபேதமும் இன்றித்தான இப்போதும் இயங்குகின்றனர் என்பதைக் காட்டவும் இம்மேதின விழா உதவும் என, அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தொழிலாளர்களையும், தமிழ் விவசாயிகளையும் அதியுயர் பாதுகாப்பு வலயக் கோட்பாடு கடுமையாகப் பாதிக்கின்றது. இக்கோட்பாட்டிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது இம்மேதின விழாவின் கருப்பொருளாக இருக்கவேண்டும்.

இம்மேதினம், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியற்பலத்தையும் காட்ட உதவும்.

தொழிலாளர்களின் தினமாகிய இத்தினத்தில், தமிழர்கள் எல்லோரும கலந்து சிறப்பித்து தமிழர்தம் உரிமைக்குரல் ஓங்கியொலிக்க ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்பதோடு, இவ்வருடமாவது ஈழத்திருநாட்டில் அமைதி, சுதந்திரம், சுபீட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன் என விநாயகமூர்த்தி எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஆனையிறவு வெற்றிக் கேடயம் பளைக்கு எடுத்துச்செல்லப்படும்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு வெற்றிநாளை ஒட்டி, எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து பளைப் பகுதிக்கு வெற்றிக்கேடயம் தாங்கிய அணி ஒன்று செல்லவுள்ளது. இப்பகுதிகளுக்கு இடைப்பட்ட தூரத்தினைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவுகளிலும் ஒவ்வொரு துறை சார்ந்தோர் கேடயத்தினை சுமக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வு, யாழ்.செயலக முன்றிலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. முதலில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் செயலகத்திலிருந்து கைதடி வரையான பகுதிவரை சுழற்சி முறையில் கேடயத்தைக் கொண்டு செல்லவுள்ளனர். கைதடி முதல் சாவகச்சேரிவரை உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்களாலும் தொடர்ந்து விளையாட்டு கழகங்களைச் சேர்ந்தவர்களாலும் கேடயம் கொண்டுசெல்லப்பட்டு, பளையை அது சென்றடையும்.

அன்றையதினம் கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்தும் பளைக்கு பல அணிகள் வருகை தரவுள்ளன.

இக்கேடயம் தேசியத் தலைவருக்குக் கையளிப்பதற்காகவே எடுத்துச் செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது. (25)

# 'வெளிச்சம்' சஞ்சிகை வெளியானது

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான வெளிச்சம் சஞ்சிகையின் 81 ஆவது இதழ் வெளிவந்திருக்கிறது.

இந்த இதழில், தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, கல்வயல் வே.குமாரசாமி, சந்திரா, துன்னாலை செல்வம், கௌஷீதகி, ஆத்மாஷி, தமிழ்மாறன், சுதாமதி, த.விஷ்ணு, புதுவை இரத்தினதுரை ஆகியோரின் கவிதைகளும், ஞாபகன், செ.கிருஷ்ணராஜா ஆகியோரின் கட்டுரைகளும், வின்சன்ற் புளோரன்ஸ், விழிமைந்தன் ஆகியோரது மொழி பெயர்ப்புப் படைப்புக்களும் இடம்பெற்றிருக்கின்றன.

இவற்றுடன், ஆதித்தநிலா, ந.சத்தியபாலன், அ.இரவி, த.ம.சேந்தன், ஆதிலட்சுமி சிவகுமார், முல்லை ஜேசுதாசன் ஆகியோரின் சிறுகதைகளும், மலைமகளின் களவெளிப் பாட்டுப் படைப்பொன்றும், முல்லை கோணேஸுடனான நேர்காணலும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

ஓவியங்களை அ.மாற்கு, கிக்கோ கோ.சி. கலைக்கதிர் ஆகியோர் வரைந்தி ருக்கின்றனர்.

# செயலகத்தின் அலுவலகம் சாவகச்சேரியில் அமையும்

யாழ்.செயலகத்தின் செயற்பாட்டு அலுவலகம் ஒன்று செப்ரெம்பர் மாதம் முதல் சாவகச்சேரியில் இயங்கவுள்ளதாக அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

தென்மராட்சி மக்களின் குறைநிறைகளை தெரியப்படுத்துவதற்கும், மீளக்குடியமர்வு தொடர்பான விடயங்களைக் கண்காணிப்பதற்கு வசதியாகவுமே இந்த அலுவலகம் திறக்கப்படவுள்ளது. வாரத்தில் ஒரு தினம் அரச அதிபர் இந்த அலுவலகத்திற்குச் சமுகமளிப்பார். அன்றையதினம் தமது முறைப்பாடுகளைப் பொதுமக்கள் தெரிவிக்கலாம். யுத்தத்தினால் சேதமடைந்த தென்மராட்சிப் பகுதியை மீளக்கட்டியெழுப்ப வசதியாகவே செயலகத்தின் செயற்பாட்டு அலுவலகம் திறக்கப்படவுள்ளது. (25)

# யாழ். வைத்தியசாலையில் நோயாளர்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் சில குறிப்பிட்ட வார்ட்டுகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, நோயாளர்கள் வார்ட்டுகளின் நடைபாதைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளதால் அவர்கள் பெரும் அவஸ்தைகளுக்குள்ளாகி வருகின்றனர்.

வன்னியிலிருந்தும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பெருமளவு நோயாளர்கள் சிகிச்சைக்காக வருவது குறிப்பிடத்தக்கது. (ரா)

# மட்டக்களப்பு நகரப் பகுதியில் புலனாய்வுப் படை விசாரணை

மட்டக்களப்பு தனியார் பஸ் நிலையத்திற்குச் சமீபமாக கடமையில் நிற்கும் இராணுவப் புலனாய்வுப் படையினர், அவ்வீதியால் செல்லும் இளைஞர்களை விசாரணை செய்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போராளிகள் மற்றும் ஆதரவாளர்களின் பெயர், விபரம் மற்றும் செயற்பாடுகள் பற்றித் தகவல் சேகரிக்கும் பணியிலேயே இவர்கள் ஈடுபடுகின்றனர்.

புலனாய்வுப் படையினருடன், சில தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களும் இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். (08)

# வடகொரியாவுடனான அமெரிக்க பேச்சுவார்த்தை சீனாவில் ஆரம்பம்!

வடகொரியாவின் அணுவாயுதத் திட்டம் குறித்த வடகொரிய-அமெரிக்க-சீன முத்தரப்புப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. சீனாவில் நடைபெறும் இப்பேச்சுக்களுக்கு சீனா அனுசரணையாளராகச் செயற்பட்டுவருகிறது.

பேச்சுக்களில் - வடகொரியா தனது அணு உலைகளை மூடவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்திய அதே வேளை, வடகொரியா மீதான அமெரிக்காவின் அச்சுறுத்தல்கள் நிறுத்தப்படவேண்டும் என வடகொரியா கேட்டுள்ளது.

பேச்சுக்கள் ஆரம்பமான நேற்றையதினம், வடகொரிய விமானப் படையின் போர் விமானங்கள் நீண்ட தூரப் பறப்புப் பயிற்சியை மேற்கொண்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என, தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வடகொரிய விமானங்கள், அமெரிக்க, ரஷ்ய உளவு விமானங்களை கண்காணித்ததாகவும் இந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

முத்தரப்புப் பேச்சுக்கள் மூன்று நாட்களுக்கு நீடிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலகவலம்

# பிரான்ஸ் நடவடிக்கைக்கு அமெரிக்கா எச்சரிக்கை

ஈராக் போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாக பிரான்ஸ் செயற்படாமைக்கு அது வருந்தும் காலம் ஏற்படுமென, அமெரிக்க உள்துறை அமைச்சர் கொலின் பவல் எச்சரித்துள்ளார்.

ஈராக் தொடர்பாக ஐ.நாவில் அமெரிக்கா கொண்டுவரும் ஒரு தரப்பான தீர்மானத்தை, பிரான்ஸ் எதிர்க்கும் என்ற அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து பவலின் இந்த எச்சரிப்பு வெளியாகியுள்ளது.

# பட்டினிச்சாவை ஒழிக்கவென எதியோப்பியாவில் இசைநிகழ்வு

தனது பதினொரு மில்லியன் மக்களின் பட்டினிச்சாவைப் போக்க, எதியோப்பிய அரசு மாபெரும் இசை நிகழ்ச்சியொன்றைத் தானே ஏற்பாடு செய்துள்ளது. 1985 ஆம் ஆண்டு எதியோப்பியாவில் வரட்சியால் ஆயிரக்கணக்கான எதியோப்பிய மக்கள் இறந்தபோது, உலகின் பல பகுதிகளில் உதவி அமைப்புக்கள், இசை நிகழ்ச்சிகளை நடத்தி 60 மில்லியன் டொலர் நிதியைச் சேகரித்தன. இந்நிதி அந்த மக்களின் உணவுத் தேவைக்காகப் பயன்பட்டது.

இதேபோன்றே, தற்போது இத்தகைய மாபெரும் இசை நிகழ்ச்சிகளை எதியோப்பிய அரசே தனது நாட்டில் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அடுத்த மாதம் 25 ஆம் திகதி இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சி மூலம் 1.7 மில்லியன் டொலர் நிதியைச் சேகரிக்க முடியும் என எதியோப்பிய அரசு எதிர்பார்க்கிறது. இந்நிகழ்ச்சிக்கான நுழைவுச்சீட்டு எதியோப்பிய நாணயத்தில் ஒரு பிர்க்கு பெறுமதியில் விற்கப்படுகிறது. வெளிநாட்டவர் உதவியை எந்நேரமும் எதிர்பாராது எதியோப்பிய மக்களே தமது உறவுகளுக்கு உதவ வேண்டும் என ஐ.நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வவுனியா வைத்தியசாலையில் வைத்தியர்கள் வேலைநிறுத்தம்

வவுனியா மாவட்ட வைத்திய சாலை வைத்தியர்கள் நேற்றுமுதல் வேலை நிறுத்தப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட அரசாங்க வைத்தியர் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால், வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவைத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் அன்பளிப்புச்செய்யப்பட்ட அம்புலன்ஸ் வாகனத்தினை, வைத்தியசாலையின் பயன்பாட்டிற்காக மீள ஒப்படைக்க வேண்டும்,

மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவமோகனின் இடமாற்ற உத்தரவு இரத்துச் செய்யப்பட வேண்டும் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள மேலதிக செயலாளரின் மீள் நியமனம் இரத்துச்செய்யப்பட வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன் வைத்தே, வைத்தியர் சங்கம் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமது பக்க நியாயப்பாட்டினை விபரமாகத் தெரிவித்து, வைத்தியர்கள் - பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை நேற்று வழங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (03)

## அத்துருகிரிய ஆயுதங்களை மீள ஒப்படைக்கப் பணிப்பு!

அத்துருகிரிய, மிலேனியம் வீடமைப்புத் திட்டத்திலிருந்து மத்திய மாகாண விசேட புலனாய்வுத்துறையால் கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களையும் ஆயுதங்களையும் மீண்டும் இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்குமாறு, கண்டி நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

வன்னிக்குள் ஆழ ஊடுருவி தாக்குதல் நடத்தும் இராணுவ விசேட அணியின் ஆயுதங்களே இவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

புலனாய்வுத்துறையால் கைப்பற்றப்பட்ட இந்த ஆயுதங்கள், தற்போது அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வினரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்களை இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்குமாறு கோரி, கண்டி குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுவை ஆராய்ந்த நீதிவான், இந்த ஆயுதங்களை இராணுவத் தளபதியிடம் கையளிக்கும்பொருட்டு இராணுவக் களஞ்சியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

## மன்னார் வந்த அகதிகள் 20 பேர் இந்திய அதிகாரிகளால் கைது!

மண்டபம் அகதி முகாமில் இருந்து மன்னார் நோக்கி வந்து கொண்டிருந்த 20 மன்னார் வாசிகள், இந்திய சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இராமேஸ்வரம் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட மேற்படி நபர்கள், இந்திய சுங்கப் பகுதியினரால் - இராமேஸ்வரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, பின் சென்னை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

இவர்களில் எட்டு ஆண்களும், எட்டுப் பெண்களும், நான்கு குழந்தைகளும் உள்ளடங்குவர்.

## மத்தியவரிசையில் ஆட சனத் ஜயசூரிய மறுப்பு!

(கொழும்பு)

ஆரம்பத் துடுப்பாட்டத்தைத் தவிர்த்து மத்திய வரிசை ஆட்டக்காரராக களத்தில் இறங்கும்படி, இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவினர் வழங்கிய ஆலோசனையை சனத் ஜயசூரிய நிராகரித்துள்ளார்.

எனினும், சனத் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக இறங்குவதே சிறந்தது என, தற்போதைய கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் அரவிந்த டீ சில்வா தெரிவித்துள்ளார். மார்வன் அத்தப்பத்துவுடன் இவர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக இறங்குவதே சிறந்தது எனவும் அரவிந்த கூறினார்.

இதேவேளை- இலங்கை அணியின் புதிய கப்டனான ஹர்ஷான் திலகரட்ண, தான் சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்தா. கடந்த 15 வருடங்களாக ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றிய 35 வயதான ஹர்ஷான், இலங்கை கிரிக்கெட் அணியின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணியின் தலைவராக அண்மையில் தெரிவாகியிருந்தார்.

## சமாதானப் பேச்சுக்குத் திரும்ப அஸ்கிரிய பீடாதிபதி கோரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்று, அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறி புத்தரகித்தர மகாநாயக்க தேரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சமாதான நடவடிக்கைகள் சீர்குலைந்தால் எதிர்காலம் கேள்விக் குறியாகும். சிறு சிறு தவறுகளை சம்பந்தப்பட்டவர்கள் பெரிதுபடுத்தாது, சமாதான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென்று அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், அரசாங்கத்துடனும், ஏனைய பொதுமக்களுடனும் ஒன்றிணைந்து வடக்கிலும் தெற்கிலும் சமாதான நடவடிக்கையில் மீண்டும் பிரவேசிக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

### இந்து குருமார் ஒன்றிய சந்திப்பு

சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தின் விசேட கலந்துரையாடல் நேற்றுமாலை குருமார் ஒன்றியத்தில் நடைபெற்றது. இதில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் கல்ந்து கொண்டனர்.

### அமைச்சர்கள் மூதூருக்கு விஜயம்

மூதூரில் கடந்த இரு தினங்களாக அமைதி நிலவுகிறது. அமைச்சர்கள் பசீர் ஷேகுதாவூத், நூர்தீன் மசூர் ஆகியோர் நேற்று மூதூருக்கு விஜயம் செய்தனர். அங்கு இடம் பெயர்ந்து அரபுக் கல்லூரியில் தங்கியுள்ள முஸ்லிம் குடும்பங்களை அவர்கள் சந்தித்தனர். மூதூரில் இரவுநேர ஊரடங்கு இப்போதும் அமுல்செய்யப்பட்டுள்ளது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.72 | 97.79 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.13 | 153.53 |
| 1 யூரோ | 105.66 | 106.81 |
| 1 சுவிஸ் பிராங் | 70.02 | 71.19 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 59.60 | 60.58 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.87 | 25.87 |

### விபத்தில் சிக்கிய இளைஞர் மயக்கம்

சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதிய இளைஞன் ஒருவன் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

ஏழுமலை ரஞ்சித்குமார் (வயது 26) என்ற மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த இளைஞரே - இந்த விபத்தில் நெஞ்சில் விழுந்த அடியினால் மயக்கமடைந்தவராவார்.

நேற்றுப் பிற்பகல் விபத்து நடந்ததும், தெல்லிப்பளை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். நேற்று நள்ளிரவு மயக்கம் தெளியாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இவர் கொண்டு வரப்பட்டார்.

### தீயில்...

தனது வீட்டிற்கு வந்து, தண்ணீரைக் குடிப்பதாக எண்ணி, கொள்கலனில் இருந்த மண்ணெண்ணெயைக் குடித்தபின்பே- தீப்பற்றி எரிந்துள்ளார்.

எரிகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட இவர், அங்கு மரணமானார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ரா,111)

### அமெரிக்காவின்...

இது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தானது

புலிகளுக்கு பேச்சுக்களில் நம்பிக்கையில்லை என்பதும் தமிழீழத்தை அடையும் நோக்குடன்தான் அவர்கள் செயற்படுகிறார்கள் என்பதையும் - அவர்கள் பேச்சுக்களில் இருந்து விலகியதிலிருந்து புரிகிறது.

ரணில் விக்கிரமசிங்கவும், புலிகளும் அமெரிக்காவின் முகவர்களாக இருந்து நாட்டைப் பிரிக்க முனைகின்றனர் எனவும் விமல் வீரவன்ச மேலும் குறிப்பிட்டார்.

### மதுபானசாலை.....

இரத்த வெள்ளத்தில் சாய்ந்த அற்புதராஜ் - சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படும்போது இடையிலேயே மரணமானார்.

இப்படுகொலையைச் செய்தவர்கள் தமது முகத்தை அடையாளந் தெரியாதபடி மூடிக் கட்டியிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தால் - சாவகச்சேரி நேற்றிரவு பெரும் பீதியிலாழ்ந்தது. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தீவிர விசாரணைகளை உடனடியாகவே ஆரம்பித்துள்ளனர்.

### திருத்தம்

23.04.2003 அன்றைய பத்திரிகையில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடப் பரீட்சைகள் பற்றிய விளம்பரத்தில் மீள் பரீட்சைகள் என்பதன் கீழ் 8 ஆம் இலக்க மீள்பரீட்சை "நுண்கலைமணி இசை/நடனம்" என்பதற்குப் பதிலாக நுண்கலைமாணி எனத் தவறாக அச்சிடப்பட்டுள்ளது. அதனை நுணகலைமணி என திருத்தி வாசிக்கவும்.

## நோர்வே அரச தரப்பினர் பாலாவை சந்திக்க முயற்சி

பேச்சுக்களிலிருந்து இடைவிலகுவதாக விடுதலைப் புலிகள் அறிவித்த பின்னர் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைச் சமாளிப்பது தொடர்பாக - நோர்வே அரசாங்கத் தரப்பு, விடுதலைப் புலிகளின அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச முயற்சித்து வருகிறது. நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இதற்காக லண்டன் பயணமாவார் எனத் தெரியவருகிறது.

இதேவேளை- கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

## வாகனம் மோதியதில் இரு பொலிஸார் படுகாயம்

(நெல்லியடி)

நேற்றுமாலை மந்திகை - கொடிகாமம் வீதியில் மந்திகைச் சந்திக்கு அருகில், வீதியோரத்தில் நடந்து சென்ற பொலிஸார் இருவரை மோதிவிட்டு வாகனம் ஒன்று வேகமாக ஓடித் தப்பித்தது.

படுகாயமடைந்த இரண்டு பொலிஸாரும் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, நிலைமை மோசமடையவே யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வாகனம் மூலம் மாற்றப்பட்டனர்.

மேற்படி மோதிய வாகனத்தினைத் தேடுவதில் பொலிஸார் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த வி.ஜி.ஜெயரட்ண (வயது 29), ராஜபக்ஷ (வயது 22) ஆகிய இரண்டு பொலிஸாருமே படுகாயமடைந்தவர்களாவர். (23)

### அரசின் நடவடிக்கை...

பிமான, புனர்வாழ்வுத் திட்டங்கள் குறித்து கடந்தகால சிறான் கூட்டங்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம். அதேநேரம் - கடந்த நவம்பர் 25 இல் ஒஸ்லோவில் நடைபெற்ற உதவிவழங்கும் சர்வதேச நாடுகளின் கூட்டத்தில் உங்கள் அரசு, வட - கிழக்கு புனரமைப்பு நிதியத்தினால் அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்கான நிதியைக் கோரியிருந்தது.

கடந்த சில மாதங்களாக எமது கூட்டங்களில் அறிவிக்கப்பட்டவற்றைக் கண்டு, வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்பார்ப்புக்கள் மிக அதிகமாகின. இதனால் எவ்வித நடைமுறை அமுலாக்கல்களுமின்றி உபகுழு தொடர்ந்து கூடுவதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

சிறான் கூட்டத்தை ஒத்திவைப்பதில் நாம் வேதனை அடையும் அதேசமயம், வடக்கு - கிழக்கு மக்களின் இடர்களைக் களைய அரசாங்கம் உடன் நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், பரஸ்பர நம்பிக்கையையும் கூட்டுறவையும் பேணமுடியும் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம் எனத் தமிழ்ச்செல்வன் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜப்பானியத் தூதுவர், நோர்வே தூதுவர், சிறான் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

### பேச்சிலிருந்து...

இக்கூட்டம் மே 7 ஆம் திகதி நடத்தப்படலாம். எனினும், இது தொடர்பான தீர்மானத்தினைத் தாம் ஒஸ்லோவிலிருந்து எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை - அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேனாட் குணதிலக இது தொடர்பாகத் தெரிவிக்கையில், புலிகளின் கடிதம் குறித்து அரசாங்கம் ஆழமாகப் பரிசீலித்து வருவதாகவும், இந்தப் பரிசீலனை முடிவுற்றதும் புலிகளுக்குப் பதில் அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார்.

## பிரதேச செய்தியாளர் தேவை

'நமது ஈழநாடு' தினசரியில் பின்வரும் பிரதேங்களில் கடமையாற்றுவதற்காக பிரதேச செய்தியாளர்கள் தேவைப்படுகின்றனர். சுயவிபரக் கோவையுடனும், உறவினர் அல்லாத இருவரது நற்சான்றுக் கடிதங்களுடனும் 27.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 'நமது ஈழநாடு' அலுவலகத்துக்கு நேரில் சமுகம் தரவும்.

**வடமராட்சி**

அல்வாய், கரவெட்டி, உடுப்பிட்டி, மருதங்கேணி, வல்வெட்டித்துறை, செம்பியன்பற்று, தொண்டமனாறு.

**தென்மராட்சி**

மட்டுவில், கைதடி, வரணி, சாவகச்சேரி, நாவற்குழி, கொடிகாமம், நுணாவில், மிருசுவில்.

**வலி. மேற்கு**

உடுவில், வட்டுக்கோட்டை, நவாலி, சங்கானை, மாதகல், சுதுமலை.

**தீவகம்**

காரைநகர், மண்டைதீவு, வேலணை.

**வலி. வடக்கு**

தெல்லிப்பளை, ஏழாலை, அளவெட்டி.

**வலி கிழக்கு**

உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, ஆவரங்கால், இருபாலை, புத்தூர்.

**வலி. தெற்கு**

திருநெல்வேலி, கோண்டாவில், புன்னாலைக் கட்டுவன், உரும்பிராய், இணுவில், கொக்குவில், சுன்னாகம், மருதனார்மடம், தாவடி.

**யாழ்.மாநகரம்**

குருநகர், நல்லூர், ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, நாவாந்துறை, சுண்டிக்குளி, ஓட்டுமடம்.

*267, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.